# உங்கள் பணப் பிரச்சனை மாறும்!



மோகன் சி. லாசரஸ்

# உங்கள் பணப் பிரச்சனை மாறும்!



மோகன் சி. லாசரஸ்

**உங்கள் பணப் பிரச்சனை மாறும்!**
ஆசிரியர்: சகோ. மோகன் சி. லாசரஸ்

முதல் பதிப்பு: **2014 மார்ச்,** பிரதிகள் – **10,000**
**2**ம் பதிப்பு: **2014 ஏப்ரல்,** பிரதிகள் – **10,000**
**3**ம் பதிப்பு: **2020 பிப்ரவரி,** பிரதிகள் – **3,000**

# பொருளடக்கம்!

**1.** **பணப் பிரச்சனை மாறும்!** **1**
- அன்பினால் கொடுத்தாள்! **7**
- கீழ்படிந்து கொடுத்தாள்! **13**

**2.** **குறைவில்லாத, செழிப்பான சுக வாழ்வு!** **27**
- கொடுக்க வேண்டும்! **29**
- விசுவாசத்தோடு கொடுத்தாள்! **30**
- விதைப்பும், அறுப்பும்! **34**
- விசுவாச வித்து! **41**

**3.** **நிரம்பி வழியும் ஆசீர்வாதம்!** **45**
- முதலாவது, கொடுக்க வேண்டும்! **48**
- தியாகத்தோடு கொடுக்க வேண்டும்! **51**
- முன்பதாக, நம்மைக் கொடுக்க வேண்டும்! **55**

வெளியீடு: **இயேசு விடுவிக்கிறார்,**
**நாலுமாவடி – 628 211,** தூத்துக்குடி மாவட்டம்.

## கலங்காதீர்கள்,

# பணப் பிரச்சனை மாறும்!

இன்றைக்கு, அனேக தேவப் பிள்ளைகளுடைய வாழ்க்கையில்கூட கடன் பிரச்சனை! பணப் பிரச்சனை! வறுமை!

"பணத்திற்கு என்ன செய்வது? பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கு என்ன செய்வது? பிள்ளைகளுடைய திருமணக் காரியத்திற்கு என்ன செய்வது? வாங்குகிற சம்பளமெல்லாம் வட்டிக்கே போய் விடுகிறது...!" என்று, பணப் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டு, செழிப்பில்லாமல், நிரம்பி வழிகிற ஒரு ஆசீர்வாதம் இல்லாமல், எப்பொழுதும் வறுமையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிற அனேகரை இந்த நாட்களில் பார்க்க முடிகிறது.

நம்முடைய கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறவர்! நம்முடைய வாழ்க்கையில் நமக்கு செழிப்பைக் கொடுக்க விரும்புகிறவர்! பொருளாதாரத்தில் எப்பொழுதும் நாம் கஷ்டப்பட்டுக் கொண்டேயிருப்பதை நம்முடைய கர்த்தர் ஒருபோதும் விரும்புகிறவரல்ல! நாம் ஆசீர்வாதமாக, செழிப்பாக, திருப்தியாக, மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றுதான் அவர் விரும்புகிறார்!

**அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வது எப்படி?** பொருளாதார ஆசீர்வாதத்தைப் பெற்று, செழிப்புள்ள, நிறைவான ஒரு வாழ்க்கை வாழ்வது எப்படி?

அதாவது, செய்கிற தொழிலில் ஒரு நிறைவான ஆசீர்வாதம்! வீட்டிற்குள் எப்பொழுதும் ஒரு நிறைவான ஆசீர்வாதம்! செய்கிற ஊழியத்தில் ஒரு நிறைவான

ஆசீர்வாதம்! கடன், பண நெருக்கடி இல்லாமல், மகிழ்ச்சியான, செழிப்பான ஒரு வாழ்க்கை வாழ என்ன செய்ய வேண்டும்?

பணப் பிரச்சனையினால் கலங்கிக் கொண்டிருக்கிற உங்களோடு, கர்த்தர் இன்றைக்கு இந்தச் செய்தியின் மூலமாகப் பேசுகிறார்! இன்றுமுதல், உங்கள் வாழ்க்கையில், பொருளாதாரத்தில், ஆசீர்வாதமான மாற்றம் வரப் போகிறது! விசுவாசத்தோடு, கவனமாக இந்தக் கர்த்தருடைய செய்தியை வாசியுங்கள்.

**"இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்.**

**ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள்.**

**அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்." மாற்கு 12:41-44.**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, நம்மை ஒவ்வொரு நாளும் கவனிக்கிறவர்! இந்த உலகத்தில், தான் உண்டாக்கிய ஒவ்வொரு மனிதனையும் அவர் பார்க்கும்போது, "அவனுடைய இருதயம் எப்படி இருக்கிறது? அவனுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது?" என்றெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்துப் பார்க்கிறார்.

இயேசு கிறிஸ்து ஒரு மனிதனை (நாத்தான்வேலை)ப் பார்த்தார். அந்த மனிதன் தன்னிடத்தில் வந்தபோது, "அவனுடைய இருதயம் கபடற்ற

ஒரு இருதயம்!” என்பதை அறிந்து, அவனைக் குறித்து, “அவன் கபடற்ற உத்தம இஸ்ரவேலன்.” என்று சாட்சி கொடுத்தார்! **(யோவான் 1:47).**

இன்னொருவனை (பர்திமேயுவை) இயேசு கிறிஸ்து பார்த்தார். அவனுடைய விசுவாசத்தை அவர் கண்டு, அவனைக் குணமாக்கினார்! **(மாற்கு 10:52).**

ஒருநாள், இயேசு கிறிஸ்து தேவாலயத்திற்குப் போய், அங்கிருந்த காணிக்கைப் பெட்டியின் அருகில் உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கை போடுவதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

நம்முடைய தேசத்திலுள்ள தேவாலயங்களில் காணிக்கை எடுப்பதைப்போல, எருசலேம் தேவாலயத்தில் காணிக்கை எடுக்க மாட்டார்கள். தேவாலயத்தில் ஒரு இடத்தில் காணிக்கைப் பெட்டி இருக்கும். ஜனங்கள் போய் அந்தப் பெட்டிக்குள் காணிக்கை போடுவார்கள், அவ்வளவுதான். இதுதான் எருசலேம் தேவாலயத்திலிருந்த ஒழுங்கு.

அங்கே வைக்கப்பட்டிருந்த காணிக்கைப் பெட்டிக்குள் ஜனங்கள் வந்து காணிக்கை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

இயேசு கிறிஸ்து எதிராக உட்கார்ந்து, அவர்கள் காணிக்கை போடுவதைக் கவனித்துக் கொண்டேயிருந்தார். ஜனங்களுக்கோ, தாங்கள் காணிக்கை போடுவதை ‘இயேசு கிறிஸ்து தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்.’ என்பது தெரியாது.

இப்படியாக நாமும் காணிக்கை போடுவதை (கர்த்தருக்கென்று கொடுப்பதை) அவர் பார்க்கிறார். அனேக சமயங்களில் நாம் அதை மறந்து விடுகிறோம்.

“ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் நாம் போடுகிற காணிக்கையை, இயேசு கிறிஸ்து பார்த்துக் கொண்டிருக்கிறார்!” என்கிற உணர்வே இல்லாமல், காணிக்கை போடுகிற கிறிஸ்தவர்கள்தான் இன்றைக்கு ஏராளம்.

"நான் போடுகிற காணிக்கையைக் கர்த்தர் பார்க்கிறார்!" என்கிற உணர்வோடு எத்தனை பேர் காணிக்கை செலுத்துகிறார்கள்? ஒருவேளை, நீங்கள் ஆலய ஆராதனையில் காணிக்கை செலுத்துவதை, உங்களுடைய சபைக்கு தசம பாகம் காணிக்கை கொடுப்பதை, அல்லது நீங்கள் ஏதாவதொரு ஊழியத்திற்குக் காணிக்கை கொடுத்து விட்டு, அதற்குரிய ரசீதை வாங்கும்போது, அல்லது ஒரு ஊழியருடைய கரத்தில் காணிக்கை கொடுக்கும்போது, அதை, "**கர்த்தருடைய கண்கள் பார்க்கிறது!**" என்பதை நீங்கள் முதலாவது அறிந்து கொள்ள வேண்டும்.

பாருங்கள், அந்த எருசலேம் தேவாலயத்தில் ஆராதனைக்கு வந்திருந்த அனேக செல்வந்தர்கள், அந்தப் பெட்டிக்குள் காணிக்கையை அள்ளி அள்ளிப் போட்டார்கள். அப்பொழுது, ஒரு ஏழை விதவையும் காணிக்கை போட வந்தாள். அவள், தன்னிடத்திலிருந்த ஒரு துட்டுக்குச் சமமான 2 காசை எடுத்து, அந்தக் காணிக்கைப் பெட்டியில் போட்டாள்.



அவள் காணிக்கை போடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த இயேசு கிறிஸ்து, உடனே தன் சீஷர்களை

அழைத்து, “அந்த ஏழை விதவையைப் பாருங்கள்! அனேகர் வந்து, நிறைய காணிக்கை போட்டார்கள்.

ஆனால், அவர்கள் எல்லோரையும்விட இவள்தான் அதிகமான காணிக்கை போட்டாள்!” என்று சொன்னார்.

“அனேகர் அவளை விட அதிகமாகக் காணிக்கை போட்டிருக்கிறார்களே! இவள் ஒரேயொரு துட்டைத்தானே போட்டாள்! ஆனால், ‘இவள்தான் அதிகம் போட்டாள்!’ என்று சொல்கிறீரே!” என்று சீஷர்கள் இயேசு கிறிஸ்துவினிடத்தில் கேட்டிருப்பார்கள். “அவர்கள் எல்லோரும் தங்களிடத்திலிருந்த அதிகமானதிலிருந்து கொஞ்சம் கொடுத்தார்கள்.

அது பெரிய காரியமல்ல. ஆனால், இவளிடத்தில் இருந்ததே, அந்த ஒரு துட்டுதான். தனது ஜீவனத்துக்கு உண்டாயிருந்த அந்த ஒரே ஒரு துட்டையும்கூட காணிக்கையாகக் கொடுத்து விட்டாள். அதாவது, தன்னிடத்திலிருந்த எல்லாவற்றையும் அவள் கொடுத்து விட்டாள்.” என்று, கர்த்தருக்குக் காணிக்கை கொடுத்த ஒரு ஏழை விதவையைக் குறித்து, இயேசு கிறிஸ்து சாட்சி கொடுத்தார்.

அப்படியானால், நாமும் கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்கிறோம். ஆலய ஆராதனைக்கோ, நற்செய்திக் கூட்டத்திற்கோ, அல்லது எங்காவது ஊழியத்திற்குப் போனாலோ காணிக்கை கொடுக்கிறோம். நாம் எங்கே போனாலும், காணிக்கை கொடுக்க நமக்கு அனேக வாய்ப்புகள் இருக்கிறது.

ஆனால், நாம் என்ன கொடுக்கிறோம்? எதிலிருந்து எடுத்து காணிக்கை கொடுக்கிறோம்? எப்படிப்பட்ட மன நிலையோடுகூட நாம் காணிக்கை கொடுக்கிறோம்? என்பதை, நம் கர்த்தராகிய தேவன் கவனிக்கிறார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

‘காணிக்கை கொடுப்பது...’ என்பது, உலக வழக்கத்தின்படி வந்த ஒரு காரியமல்ல. வேதாகமத்தில்

சொல்லப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஒரு திட்டம், ஒழுங்கு, கட்டளை! அதை நாம் மறந்து விடக் கூடாது.

காணிக்கை கொடுக்கிற காரியம், நம்முடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஒரு பங்கு. காணிக்கை கொடுத்ததில், அந்த ஏழை விதவையின் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து கண்டு கொண்ட காரியம் என்ன? கர்த்தருக்கென்று கொடுத்ததில், அவளைக் குறித்து அவர் புகழ்ந்ததற்குக் காரணம் என்ன? அவள் கொடுத்த காரியத்தில், அவருடைய உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட காரியம் என்ன? நாம் கொடுக்கும்போது கவனிக்க வேண்டிய காரியம் என்ன? என்பதைக் குறித்த காரியங்களை நீங்கள் சரியாக அறிந்து கொண்டால், **உங்களுடைய வாழ்க்கையில் இருக்கிற வறுமை, கடன் பிரச்சனை, பணப் பிரச்சனையெல்லாம் நீங்கும்!**

நாம் இவைகளிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளக் கூடிய அனேக வழிகளைக் குறித்து, பரிசுத்த வேதாகமம் நமக்குச் சொல்கிறது.

கர்த்தரிடத்திலிருந்து அற்புதங்களைப் பெற்றுக் கொள்ள, ‘ஜெபம் ஒன்றுதான் வழி!’ என்று, அனேக சமயங்களில் நாம் நினைக்கிறோம்.

சில காரியங்களுக்காக வெறுமனே ஜெபித்தால் மாத்திரம் அந்தக் காரியத்தில் அற்புதங்களை, ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள முடியாது.

**கர்த்தருடைய வசனத்தை விசுவாசிக்க வேண்டும்.** அதாவது, “கர்த்தருடைய வசனம் அதைக் குறித்து என்ன சொல்கிறது?” என்று அறிந்து, அந்த வேத வசனத்திற்குக் கீழ்படியும்போதுதான், அந்தக் காரியத்தில் ஒரு அற்புதத்தை, ஆசீர்வாதத்தை நம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆகவே, காணிக்கை கொடுக்கிற காரியத்தையும் இயேசு கிறிஸ்து மிகவும் முக்கியமாகக் கருதுகிறாரே! அதில் அப்படி என்னதான் இருக்கிறது? அந்த ஏழை விதவையின் காணிக்கையைக் குறித்து, இயேசு கிறிஸ்து

சாட்சி கொடுத்தாரே! அவள் கொடுத்ததில், அப்படி என்னதான் விசேஷம் இருக்கிறது?

# அன்பினால் கொடுத்தாள்!

அவள் கர்த்தர் மீது வைத்திருந்த அன்பை இயேசு கிறிஸ்து பார்த்தார். அதாவது, நாம் கர்த்தருக்கென்று கொடுக்கும்போது, முதலாவது கர்த்தர் பேரில் நமக்கிருக்கிற அன்பை நாம் வெளிப்படுத்துகிறோம்.

அன்பு இருந்தால்தான், எதையுமே நம்மால் மற்றவர்களுக்குக் கொடுக்க முடியும். நாம் எதையுமே மற்றவர்களுக்குக் கொடுக்காமல், 'நான் அன்பு காட்டுகிறேன்!' என்று சொல்ல முடியாது. **கொடுத்தல் இல்லாமல் அன்பு இல்லை!**

**"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் (இயேசுவை) தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." யோவான் 3:16.**

கர்த்தராகிய தேவன், தான் உண்டாக்கிய மனுக் குலத்தின் மீது வைத்த அன்பை எப்படி வெளிப்படுத்தினார்? "நான் உலகத்தை நேசிக்கிறேன், எல்லா மக்களையும் நான் நேசிக்கிறேன்!" என்று கர்த்தர் வெறுமனே வார்த்தையில் சொல்லிக் கொண்டிருக்கவில்லை.

தன்னுடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்குக் கொடுத்து, தன் அன்பை வெளிப்படுத்தினார். அவரைக் கர்த்தர் நமக்குக் கொடுத்ததினால்தான், அவர் நம் மீது வைத்திருக்கிற அன்பு வெளிப்பட்டது. அப்படியானால், **கொடுத்தல் இல்லாமல் அன்பு இல்லை!**

சில வீடுகளில், "எங்கள் அப்பாவுக்கு என் மீது அன்பே கிடையாது. ஏனென்றால், எங்களுக்கு ஒன்றுமே வாங்கிக் கொண்டு வர மாட்டார்கள்." என்று சிறு பிள்ளைகள்

சாதாரணமாகச் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால், தினமும் வீட்டிற்கு வருகிற சமயங்களில் ஏதாவது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொண்டுபோய் கொடுத்தால், அந்தப் பிள்ளைகள், "எங்கள் அப்பாதான் நல்ல அப்பா. எங்கள் மீது அவருக்கு அதிக அன்பு, பாசம்!" என்று சொல்வார்கள்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்தாலும், கொடுக்கா விட்டாலும், அவர்கள் மீது நீங்கள் அன்பாகத்தான் இருக்கிறீர்கள்! ஆனால், அந்தக் கொடுக்கிறதின் மூலமாகத்தான் நீங்கள் உங்கள் அன்பை அவர்களிடத்தில் வெளிப்படுத்துகிறீர்கள். அப்பொழுதுதான் அந்தக் குழந்தையும், "என் மீது அன்பாக இருக்கிறார்கள்!" என்று அறிந்து கொள்கிறது. ஆகவே, ஒன்றுமே **கொடுக்காமல் அன்பு இல்லை.**

**"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." ரோமர் 5:8.** "இயேசு கிறிஸ்து நம் மீது அன்பு வைத்திருக்கிறார்!" என்று எப்படிச் சொல்ல முடியும்? இயேசு கிறிஸ்து நமக்காக தன் ஜீவனையே பலியாகக் கொடுத்தார்! தன் இரத்தத்தை நமக்காகச் சிந்தி, தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார்.

**"தம்முடைய ஒரேபேறான குமாரனாலே (இயேசு கிறிஸ்துவினாலே) நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.**

**நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." 1 யோவான் 4:9,10.**

பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனை நமக்காகத் தந்ததினால்தான் அவர் நம் மீது வைத்த அன்பு

வெளிப்பட்டது. அதே போலத்தான், கர்த்தருக்கு நாம் கொடுக்கிறதின் மூலமாக, அவர் மீது நாம் வைத்திருக்கிற அன்பை வெளிப்படுத்துகிறோம்.

**ஒருசமயம், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தகப்பனார், என்னைப் பார்க்க அலுவலகத்துக்கு வந்தார்.**

**அவரைப் பார்த்தவுடனேயே, அவர் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து கொண்டேன். அவர் என்னிடத்தில், ''வட இந்தியாவிலுள்ள ஏழை மக்கள் கூடி கர்த்தரை ஆராதிப்பதற்காக, நீங்கள் ஆலயம் கட்டிக் கொடுப்பதாக, உங்களுடைய 'இயேசு விடுவிக்கிறார்' பத்திரிக்கையில் நான் வாசித்தேன்.**

**வட இந்தியாவில் ஆலயம் கட்ட நானும் காணிக்கைப் பணம் கொடுப்பதாகத் தீர்மானித்து, உங்களிடத்தில் காணிக்கை கொடுத்து விட்டுப் போகத்தான் வந்திருக்கிறேன்.**

**மொத்தமாகக் கொடுப்பதற்கான 1 லட்ச ரூபாய் என்னிடத்தில் இல்லை. இப்பொழுது ₹ 25,000தான் என்னிடத்தில் இருக்கிறது. அந்தப் பணத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்.**

**இதை முதல் பங்காக வைத்துக் கொள்ளுங்கள். மீதிப் பணத்தை, பிறகு நான் கொஞ்சம் கொஞ்சமாகத் தந்து விடுகிறேன்.'' என்று சொல்லி, அந்தப் பணத்தை மேஜையின் மீது வைத்தார்.**

**நான் அவரிடத்தில், ''நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''நான் கொத்தனார் வேலை செய்கிறேன். கூலி வேலைதான்!'' என்று சொன்னார். அப்படியானால், அனுதினமும் கூலி வேலை செய்துதான் அவர் தன்னுடைய குடும்பத்தை நடத்தி வருகிறார்.**

**அவரைப் பொருத்த வரையில், '₹ 25,000' என்பது, ஒரு பெரிய விஷயம்! அவர் சொன்னது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.**

நான் திரும்பவும் அவரிடத்தில், ‘‘சரி, எப்படி இந்தப் பணத்தைச் சேர்த்தீர்கள்?’’ என்று கேட்டேன். அதற்கு அவர், ‘‘என்னுடைய பையன் +2 படிக்கிறான். ‘அடுத்த வருடம் அவனை எப்படியாவது கல்லூரியில் சேர்த்து, படிக்க வைக்க வேண்டும்.’ என்று எனக்கு ஒரு ஆசை. நான்தான் படிக்கவில்லை. ஆகவே, நான் சம்பாதிக்கிற பணத்திலிருந்து நூறு, இருநூறு என்று எடுத்து, கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துக் கொண்டே வந்தேன்.

அது இப்போது ₹ 25,000 வரை சேர்ந்து விட்டது. இதற்கிடையில் வட இந்தியாவில் ஆலயம் கட்டுகிற காரியத்தைக் குறித்து நான் அறிந்தவுடன், ‘அதற்குக் கொடுக்க வேண்டும்.’ என்று எனக்குள் ஒரு விருப்பம் உண்டானது. அதனால்தான் அந்தப் பணத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.’’ என்று சொன்னார்.

‘‘பையன் +2 படிக்கிறான்...’ என்று சொல்கிறீர்கள். இப்பொழுது அவனுக்குப் பரீட்சை வரப் போகிறது. இன்னும் சில மாதங்களில் அவனைக் கல்லூரியில் சேர்க்க வேண்டுமே! அப்பொழுது பணத்திற்கு என்ன செய்வீர்கள்?’’என்று நான் அவரிடத்தில் கேட்டதற்கு, ‘‘அதை ஆண்டவர் பார்த்துக் கொள்வார்.

இந்தப் பணத்தை வட இந்தியாவில் ஆலயம் கட்டுகிற ஊழியத்திற்குக் கொடுக்கிறேன், வாங்கிக் கொள்ளுங்கள்.’’ என்று சொல்லிக் கொடுத்தார்.

பாருங்கள், தன் மகனுடைய மேல் படிப்பிற்காகக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்த பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, ‘‘மீதிப் பணத்தையும் நான் கொண்டு வந்து தருகிறேன்.’’ என்றும் சொன்னார்.

அதாவது, இயேசு கிறிஸ்துவின் மீது தனக்கிருந்த அன்பினால், தன் மகனுடைய படிப்புக்காகச் சேர்த்து வைத்திருந்த பணத்தை, கர்த்தருடைய

ஊழியத்திற்கென்று கொடுத்து விட்டார்.
அப்பொழுதுகூட என் மனது கேட்காமல், “இது உங்கள் மகனைப் படிக்க வைப்பதற்காக நீங்கள் சேர்த்து வைத்த பணம். இதை வாங்குவதற்கு எனக்கே கஷ்டமாக இருக்கிறது. நீங்கள் ஏன் இதைக் கொண்டு வந்தீர்கள்?” என்று கேட்டேன். அதற்கு அவர், “சில வருடங்களுக்கு முன்பு, ‘குழித்துறை’ என்கிற இடத்தில் உங்களுடைய கூட்டம் நடைபெற்றது.

நான் குஷ்ட ரோக வியாதியினால் பாதிக்கப்பட்டு, சரீரமெல்லாம் அழுகி நாற்றமெடுத்து, வெளியில் மக்களோடு பழக முடியாமல், வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்தேன். கடைசி நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பி, பின்னால் இருட்டுக்குள் ஒரு மரத்தடியில் யாருக்கும் தெரியாமல் வந்து நின்று கொண்டிருந்தேன்.

நீங்கள் பிரசங்கம் பண்ணி முடித்த பிறகு, வியாதியஸ்தர்களுக்காக ஜெபத்தை ஏறெடுத்துக் கொண்டிருக்கும்போது, நானும் மிகுந்த கண்ணீரோடு இயேசு கிறிஸ்துவை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது ஆவியானவருடைய ஏவுதலினால் நீங்கள் உந்தப்பட்டு, ‘நீங்கள் குஷ்டரோக வியாதியினால் பாதிக்கப்பட்டு, இந்தக் கூட்டத்திற்குள் வர வெட்கப்பட்டு, பின்னால் ஒரு மரத்தடியில் இருட்டுக்குள் நின்று கொண்டு ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய ஜெபத்தைக் கர்த்தர் கேட்டார். இயேசு கிறிஸ்து இன்றைக்கு உங்களைத் தொட்டு குணமாக்குகிறார்.

கர்த்தர் எனக்கு வெளிப்படுத்துகிறார்...’ என்று நீங்கள் வெளிப்படுத்திச் சொன்னீர்களே, அது நான்தான்! கர்த்தர் அன்றைக்கே என்னைத் தொட்டு சுகமாக்கி விட்டார்.

பாருங்கள், எனக்கு குஷ்ட ரோகம் வந்ததற்கான எந்தவொரு சின்ன அடையாளம்கூட என் சரீரத்தில்

**இல்லை. அந்த நாள்முதல், நான் பூரண சுகத்தோடு இருக்கிறேன். எனக்கு இவ்வளவு பெரிய அற்புதத்தைச் செய்து, எனக்கு சுகம் கொடுத்து, என்னையும் இந்த உலகத்தில் ஒரு மனிதனாக வாழ வைத்த அந்த இயேசு கிறிஸ்துவுக்காக நான் ஏதாவது செய்ய வேண்டும். அவருடைய ஊழியத்திற்காக, வட இந்தியாவில் ஒரு ஆலயம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, என் இயேசு கிறிஸ்துவுக்காக நான் இந்தப் பணத்தைக் கொண்டு வந்தேன்.'' என்று, அந்த ஏழை மனிதன் சொன்ன அந்த வார்த்தைகள் என் இருதயத்தைத் தொட்டது.**

அவர் சும்மா கொண்டு வரவில்லை! பெருமைக்குக் கொண்டு வரவில்லை! கர்த்தர் மீது, தான் கொண்டிருந்த உள்ளார்ந்த அன்பு! அந்த அன்பை அவர் இப்படியாக வெளிப்படுத்தினார்.

பாருங்கள், அந்த ஏழை விதவைப் பெண்ணிடத்தில் கடைசியாக 2 காசுதான் இருந்தது! இனி யாராவது அவளுக்கு ஏதாவது கொடுத்து உதவினால்தான் உண்டு. ஆனால், அந்தக் காசு தனக்கு 'அடுத்த வேளை உணவுக்கு ஆகும்!' என்று எண்ணி, அவள் வைத்துக் கொள்ளவில்லை. அந்தக் கடைசி 2 காசையும் கர்த்தருக்கென்று காணிக்கைப் பெட்டியில் போட்டு விட்டாள்.

நம் ஊர் ஆலயங்களில், காணிக்கைப் பையை நாம் இருக்கிற இடத்திற்குக் கொண்டு வருவார்கள். காணிக்கைப் பை நம்மைத் தேடி வருகிற அந்த நேரத்தில், "நாம் காணிக்கை போடவில்லை என்றால், மற்றவர்கள் ஏதாவது நினைப்பார்களே!" என்பதற்காகக் காணிக்கை போடலாம். ஆனால் அந்த ஏழை விதவைக்கென்று எதுவும் கிடையாது. அவளுக்கே யாராவது கொடுத்தால்தான் உண்டு. எருசலேம் தேவாலயத்தில் காணிக்கை எடுக்க மாட்டார்கள்.

ஒரு இடத்தில் காணிக்கைப் பெட்டி இருக்கும். நாம் விரும்பினால், அந்தக் காணிக்கைப் பெட்டிக்கருகில் போய் காணிக்கை போடலாம், விரும்பா விட்டால், போய்

கொண்டே இருக்கலாம். யாரும் எதுவும் சொல்லப் போவதில்லை. ஆனால் அவளே கொண்டு வந்து, அந்தக் காணிக்கைப் பெட்டிக்கருகில் போய், தன்னிடத்திலிருந்த அந்த 2 காசை முழுவதுமாகப் போட்டு விட்டாள்.

காரணம் என்ன தெரியுமா? கர்த்தர் மீது அவள் வைத்திருந்த அன்பு! நீங்கள் இன்றைக்கு எப்படிக் கொடுக்கிறீர்கள்? கடமைக்காகக் கொடுக்கிறீர்களா? ‘மற்றவர்கள் பாராட்ட வேண்டும்.’ என்பதற்காகக் கொடுக்கிறீர்களா? அல்லது இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள அன்பினால் கொடுக்கிறீர்களா?

நீங்கள் கொடுப்பதின் மூலமாக, இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள உங்கள் அன்பை வெளிப்படுத்துகிறீர்கள். அதைப் பார்த்து, கர்த்தர் உங்கள் தேவைகள் சந்திக்கப்படும்படி ஆசீர்வதிப்பார்!

உங்கள் பணப் பிரச்சனைகள் நீங்கும்படி உங்களுக்கு அற்புதம் செய்வார்! “எனக்காக தன் ஜீவனையே சிலுவையில் கொடுத்த என் இயேசு கிறிஸ்துவுக்கு இந்தக் காணிக்கையைக் கொடுக்கிறேன்!” என்று நீங்கள் அவரை நேசித்துக் கொடுக்கும்போதுதான், கர்த்தர் உங்களுடைய அந்தக் காணிக்கையை அங்கீகரித்து, கொடுக்கிற உங்களையும் ஆசீர்வதிப்பார்!

# கீழ்ப்படிந்து கொடுத்தாள்!

நாம் கர்த்தரை ஆராதிக்க ஆலயத்திற்குப் போகும்போது, வெறுங்கையோடு போகக் கூடாது. இது கர்த்தருடைய கட்டளை! கர்த்தருக்குச் செலுத்த, “காணிக்கை கொண்டு போக வேண்டும்!” என்று, பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

**“கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக.” யாத். 25:1, 2.**

**மோசே** 40 நாட்கள் தேவ சமூகத்தில் இருந்தபோது, கர்த்தர் அவரிடத்தில், முதலாவது, “இஸ்ரவேல் புத்திரர்களாகிய என் ஜனங்களை எனக்குக் காணிக்கை கொண்டு வரச் சொல்.

வெறுங் கையோடு என்னுடைய சமூகத்திற்கு அவர்கள் வரக் கூடாது. உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தில் காணிக்கை வாங்கு. முறுமுறுத்துக் கொண்டு, கடமைக்காகக் காணிக்கை கொடுக்கிறவர்களிடத்தில் வாங்க வேண்டாம்.” என்று சொன்னார்.

சொல்லப் போனால், அந்தச் சமயத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு வசிப்பதற்குச் சொந்தமாக நிலமோ, தோட்டமோ, வருமானமோ, எதுவுமே கிடையாது. இன்னும் அவர்கள் வேலை செய்யவில்லை.

430 வருடங்களாக அவர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்திருக்கிறார்கள்! அடிமைகளாக இருந்தவர்களுக்கு யார் சம்பளம் கொடுத்திருப்பார்கள்? ஆனால் அவர்கள் எகிப்து தேசத்தைக் கொள்ளையிட்டு, வந்து கொண்டிருந்தார்கள்! அப்பொழுது, அவர்களுக்கு எவ்வளவோ தேவைகள் இருந்திருக்கும்!

அந்தச் சூழ்நிலையில்தான், “இஸ்ரவேல் புத்திரர்களை எனக்குக் காணிக்கை கொண்டு வரும்படி சொல்.” என்று கர்த்தர் சொன்னார்.

ஏன் கர்த்தருக்குப் பணக் கஷ்டமா? அவர் ஐசுவரியமுள்ள தேவன்! “வெள்ளியும், பொன்னும் என்னுடையது!” என்று சொல்கிறார்! எல்லாமே அவருடையது! பிறகு எதற்கு அவருக்குக் காணிக்கை? அதுவும் வனாந்தரத்தில் அவருக்குக் காணிக்கை எதற்கு?

அவருடைய ஊழியம் நிறைவேற்றப்பட, அவருடைய ஆசரிப்புக் கூடாரத்தின் வேலை நடக்க, ஆசாரியர்களுடைய தேவைகள் சந்திக்கப்பட, அவருடைய ஊழியர்களுடைய தேவைகள் சந்திக்கப்பட, ‘ஜனங்கள் காணிக்கை கொண்டு வரட்டும்!’ என்றுதான் கர்த்தர்

சொன்னார். "அவர்கள் என்னென்ன கொண்டு வர வேண்டும்!" என்றும் கர்த்தர் சொன்னார். அந்தக் காலத்தில் அவர்களிடத்தில் காசு, பணம் கிடையாது. அவர்களிடத்தில் இருந்ததெல்லாம், பொன், வெள்ளி, வெண்கலம். ஆகவே அவர்கள், அந்தப் பொருட்களையெல்லாம் காணிக்கையாகக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

பாருங்கள், "தேவ சமூகத்திற்கு நாம் போகும்போது, வெறுங் கையோடு போகக் கூடாது. கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க வேண்டும்." என்பதாக, **கர்த்தருடைய கட்டளை** ஒன்று இருக்கிறது.

நாம் ஏன் இன்னும் ஒரு பரிபூரணமான ஆசீர்வாதத்திற்குள் இல்லை என்றால், **கர்த்தருடைய வசனத்தை இன்னும் நாம் சரியாக அறிந்து கொள்ளவில்லை** என்பதுதான், வேதனைக்குரிய ஒரு காரியம்!

வேத வசனத்தின்படி நாம் நடக்காததினால்தான், போதுமான அளவு ஆசீர்வாதத்தை நம்முடைய சபைகளுக்குள்ளும், தேவப் பிள்ளைகளுடைய குடும்பத்திற்குள்ளும் நம்மால் பார்க்க முடியவில்லை. கர்த்தர் ஏன் நம்மிடத்தில் காணிக்கை கேட்கிறார்? அவருக்காகவா? அல்லவே அல்ல! நம்மை ஆசீர்வதிக்கத்தான் நம்மிடத்தில் கர்த்தர் காணிக்கை கேட்கிறார். அதுதான் கர்த்தருடைய ஒழுங்கு.

**ஆபிரகாம்** தனக்கு உண்டான எல்லாவற்றிலும் கர்த்தருக்குத் தசம பாகம் கொடுத்தார். அப்படி அவர் கர்த்தருக்குக் கொடுத்ததினால்தான் செல்வச் சீமானாக மாறினார். கர்த்தருக்குக் கொடுக்கக் கொடுக்கத்தான் ஆசீர்வாதம்!

**"மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கை களிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்.**

**என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.'' மல்கியா 3:8–10.**

"பணக் காரியத்தில் நீங்கள் ஆசீர்வாதமாக இல்லை. எவ்வளவுதான் உங்களுக்கு வருமானம் வந்தாலும் கடன்! வீட்டில் மிச்சம் இல்லை! வீண் செலவுகள்! ஒரு பரிபூரண ஆசீர்வாதமில்லை! என் ஜனத்தாராகிய நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்! நீங்கள் சாபத்துக்குள்ளாக இருக்கிறீர்கள்!" என்று கர்த்தர் சொல்கிறார்.

"அது என்ன சாபம்?" என்றால், "என்னை நீங்கள் வஞ்சித்தீர்கள்! அது உங்களுக்கு சாபம்!" என்று கர்த்தர் சொல்கிறார். "நாங்கள் உம்மை எந்தக் காரியத்திலே வஞ்சித்தோம்?" என்று நீங்கள் கேட்பீர்களானால், "எனக்குச் செலுத்த வேண்டிய தசம பாகத்திலும், காணிக்கைகளிலுந்தான்!" என்று கர்த்தர் சொல்வார்.

'**தசம பாகம்**' என்றால், பத்தில் ஒன்று. அது **கர்த்தருக்குரியது.** உங்களுடைய வருமானம், பணமாகவோ, பொருளாகவோ அல்லது வேறு எதுவாகவோ இருக்குமானால், அதில் **பத்தில் ஒரு பங்கு கர்த்தருக்குரியது** என்பதை மறந்து விடாதீர்கள். அது கர்த்தருடைய ஊழியத்திற்குப் பயன்பட வேண்டும். ஆகவே, "அதைச் செய்யா விட்டால், அது ஒரு சாபம்!" என்பதாக பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

**"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது**

**நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.'' மல்கியா 3:10.**

பாருங்கள், கர்த்தர் நம்மை சோதிக்கிறதைப்போல, நாமும் கர்த்தரை சோதித்துப் பார்க்க வேண்டுமாம்! "நீங்கள் என் ஆலயத்திற்கு தசம பாகத்தைக் கொண்டு வாருங்கள். நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடம் கொள்ளாமல் போகுமட்டும் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேனா? இல்லையா? என்று என்னை நீங்கள் சோதித்துப் பாருங்கள்." என்று கர்த்தர் நம்மைப் பார்த்து சவால் விடுகிறார். இப்படிப்பட்டதான ஆசீர்வாதம் எத்தனை கிறிஸ்தவக் குடும்பத்தில் இருக்கிறது? கர்த்தர் பொய் சொல்வாரா? ஏன் ஆசீர்வாதம் இல்லை? நாம் செய்வது தவறா? கர்த்தர் செய்வது தவறா? யோசித்துப் பாருங்கள், நாம்தான் தவறு செய்வோம். காரணம், கர்த்தர் ஒருபோதும் தவறு செய்கிறவரல்ல!

பாருங்கள், நம்மில் அனேக விசுவாசிகளுக்கு வேத வசனத்தைப் பற்றியே தெரியவில்லை. அதுதான் பிரச்சனையே! வேத வசனத்தைப் பற்றித் தெரியாததினால்தான் அவர்களால் ஆசீர்வாதத்தைப் பரிபூரணமாகப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

**ஒரு வாலிபன் படித்து முடித்து விட்டு, வெகு நாட்களாக வேலைக்காகக் காத்திருந்தான். ஒருநாள் அவனுக்கு ஒரு நேர்முகத் தேர்வுக்கு (Interview) அழைப்பு வந்தது. அவன் தன் வீட்டிலிருந்து புறப்பட்டு, படகில் ஏறி ஒரு ஆற்றைக் கடந்து அக்கறைக்குப் போய், அங்கிருந்துதான் பஸ்ஸில் பிரயாணப்பட்டுப் போக வேண்டும். துக்க முகத்தோடு அவன் படகில் போய் கொண்டிருக்கும்போது, அந்தப் படகோட்டி அவனிடத்தில், ''ஏன் தம்பி துக்கமாக இருக்கிறீர்கள்?''**

என்று கேட்டார். அந்தப் படகோட்டி ஒரு விசுவாசி. அதற்கு அந்த வாலிபன், ‘‘நான் படித்து முடித்து விட்டு, வெகு நாட்களாக வேலை தேடிக் கொண்டேயிருக்கிறேன். இதுவரை எந்தவொரு வேலையும் எனக்குக் கிடைக்கவில்லை. இன்றைக்குக்கூட ஒரு இன்டர்வியூவுக்குத்தான் போகிறேன். அதுவும் கிடைக்குமோ? கிடைக்காதோ? தெரியவில்லை. அதனால்தான் மிகவும் மனச் சோர்வாக இருக்கிறது.’’ என்று சொன்னான்.

அதற்கு அந்தப் படகோட்டி, ‘‘தம்பி, உங்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன், அதன்படி நீங்கள் செய்வீர்களா? கர்த்தர் உங்களுக்கு நல்ல ஒரு வேலையைத் தருவார். உங்களை ஆசீர்வதிப்பார்.’’ என்றார். அதற்கு அவன், ‘சொல்லுங்கள்...’ என்று சொன்னவுடன், அந்தப் படகோட்டி, ‘‘தம்பி, கர்த்தர் உங்களுக்கு நிச்சயமாக ஒரு வேலை தருவார். அதன் மூலமாக உங்களுக்கு வருகிற வருமானத்தில் தசம பாகத்தை எடுத்து, தவறாமல் கர்த்தருக்குக் கொடுத்து விட வேண்டும். நீங்கள் வாங்குகிற சம்பளம் எவ்வளவாக இருந்தாலும், பத்தில் ஒன்றை எடுத்துக் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், தசம பாகம் கர்த்தருக்குரியது. அப்படிக் கொடுப்பதாகப் பொருத்தனை பண்ணிக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.’’ என்று சொன்னார்.

உடனே அந்த வாலிபன் அந்தப் படகில் வைத்தே, ‘‘ஆண்டவரே, நீர் எனக்கொரு வேலை கொடுத்தீரென்றால், என்னுடைய வருமானத்தில் தசம பாகத்தை எடுத்து உமக்குக் கொடுப்பேன்.’’ என்று பொருத்தனை செய்து ஜெபித்து விட்டு, இன்டர்வியூவுக்குச் சென்றான்.

கர்த்தர் அவனுடைய பொருத்தனை ஜெபத்தைக் கேட்டு, அவனுக்கு ஒரு வேலை கிடைக்கச் செய்தார். அவன் கர்த்தருக்குப் பயந்து, உண்மையாக வேலை

செய்தான். சம்பளம் வந்ததும், அதை ஜெபம் பண்ணி, பத்தில் ஒரு பங்கை எடுத்து, அதை ஆலயத்திற்குக் கொடுத்து வந்தான். மீதிதான் அவனுக்கு. ஒவ்வொரு மாதமும் தவறாமல் சரியாக அதைச் செய்து வந்தான். அவன் உண்மையாக தசம பாகத்தைத் தனக்குக் கொடுத்து வருவதைப் பார்த்த கர்த்தர், சாதாரண ஒரு வேலைக்காரனாக இருந்தவனை, மேற்பார்வையாளராக (Supervisor) வேலை உயர்வைக் கொடுத்து விட்டார். இப்பொழுது அவனுக்குச் சம்பளம் அதிகமாகி விட்டது! அதிலும் தசம பாகத்தைக் கர்த்தருக்கு உண்மையாகக் கொடுத்தான். கர்த்தர் அவனுடைய உண்மையைப் பார்த்து, இன்னும் அவனை உயர்த்தச் சித்தமானார்.

ஒருநாள் அந்தக் கம்பெனி முதலாளியானவர், "நீ உண்மையாக, உத்தமமாக வேலை செய்கிறாய். நீ செய்கிறதெல்லாம் வாய்க்கிறது. ஆகவே நீ என்னோடு தொழில் பங்காளராகச் (Business Partner) சேர்ந்து விடு." என்று அவனிடத்தில் சொல்லி, அவனை ஒரு Business Partner ஆகச் சேர்த்துக் கொண்டார்.

பாருங்கள், கர்த்தர் அவனை எப்படி உயர்த்திக் கொண்டேயிருக்கிறார் என்று! இப்போது அவனுக்கு இன்னும் வருமானம் உயர்ந்தது. அதிலும் அவன் சரியாக கர்த்தருக்குத் தசம பாகம் கொடுக்க ஆரம்பித்தான். கொஞ்ச நாட்களுக்குள் அந்த முதலாளி, "எனக்கு அனேக தொழில்கள் இருக்கிறது. எல்லாவற்றையும் என்னால் பார்க்க முடியவில்லை. நீ நன்றாகச் செய்கிறாய். ஆகவே, இந்தக் கம்பெனியை உனக்கே தந்து விடுகிறேன்! இனி நீதான் இந்தக் கம்பெனிக்கு முதலாளி!" என்று சொல்லி, அந்தக் கம்பெனியை அவனுக்கே எழுதிக் கொடுத்து விட்டார்!

அந்த வாலிபன், தனக்கு வந்த வருமானத்திலெல்லாம் தசம பாகத்தைக் கர்த்தருக்குக் கொடுக்கக் கொடுக்க, கர்த்தர் அவனை ஆசீர்வதித்து, உயர்த்தி, இன்றைக்கு உலகம் முழுவதும் அவனுடைய

**கம்பெனிப் பொருள் விற்பனையாகிறது. அந்த நபர் யாரென்றால், அவர்தான் 'கோல்கேட்!'.**

**'கோல்கேட் பற்பசை' (Colgate Paste) வந்த விதம் இப்படித்தான்! அந்தக் கம்பெனியினுடைய முதலாளி ஒரு விசுவாசி! தான் செய்திருந்த பொருத்தனையின்படி, தசம பாகத்தில் அவர் உண்மையாக இருந்ததினால்தான், கர்த்தர் அவரை ஆசீர்வதித்து உயர்த்தி, இவ்வளவு பெரிய ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார்.**

**கொடைக்கானலை மையமாக வைத்து, உலகமெங்கும்போய் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கிற Rev. டேவிட் டூவர்ட் Jr., என்கிற ஒரு தேவ மனிதரைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவருடைய தகப்பனார் ஒரு மிஷனெரி. அந்த நாட்களில் இவருடைய தகப்பனார், இவருக்கு 1 ரூபாயை Pocket Moneyயாகக் கொடுத்தாலும், ''இந்த 1 ரூபாயையும் நீ செலவு பண்ணி விடக் கூடாது. இதிலிருந்து பத்து பைசா தசம பாகத்தை கர்த்தருக்கென்று எடுத்து வைத்து விடு. மீதி 90 பைசாதான் உன்னுடைய செலவுக்கு!'' என்று சொல்வாராம்!**



அதேபோல நாமும், நம்முடைய பிள்ளைகளுக்கு அதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். உதாரணத்திற்கு, நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்கு நூறு ரூபாய் கொடுத்தால், "அதில் பத்து ரூபாய் தசம பாகத்தைக் கர்த்தருக்கென்று கொடு." என்று சொல்லிப் பழக்குங்கள். அப்படிப் பழக்கினால், நிறைவான ஆசீர்வாதம் உண்டாகும்! வானத்தின் பலகணிகளைத் திறந்து, கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதிப்பார். இதுதான் ஆசீர்வாதத்தின் இரகசியம்!

**சென்னையில் தொழில் செய்து கொண்டிருக்கிற ஒரு சகோதரரை எனக்குத் தெரியும். அவர்கள் நன்றாக ஆசீர்வாதமாக இருக்கிறார்கள். நான் ஒருமுறை**

**அவர்களைச் சந்தித்து, ''உங்களுடைய ஆசீர்வாதத்திற்கு என்ன காரணம்?'' என்று கேட்டேன்.**

**அதற்கு அந்த சகோதரர், ''எங்களுடைய தகப்பனார் கர்த்தருக்குப் பயந்து நடந்தவர். எங்களுடைய கடை, பிரதானமான ஒரு இடத்தில் இருக்கிறது. என்றாலும், ஞாயிற்றுக்கிழமை வந்து விட்டால், 'இன்றைக்கு உங்கள் எல்லோருக்கும் ஓய்வு நாள். கடையில் வேலை செய்கிற நீங்கள் அத்தனை பேரும் இன்றைக்கு ஆலயத்திற்குப் போக வேண்டும். கர்த்தர் அப்படித்தான் எனக்குச் சொல்லி இருக்கிறார்.' என்று சொல்லி, கடையைத் திறக்க மாட்டார்கள். எவ்வளவு வருமானம் வந்தாலும், பத்தில் ஒரு பங்கு தசம பாகத்தைத் தவறாமல் கர்த்தருக்குக் கொடுப்பார்கள். அதனால்தான் கர்த்தர் இவ்வளவாக எங்களை ஆசீர்வதித்திருக்கிறார்.'' என்று சந்தோஷமாகச் சொன்னார்.**

அதேபோல, உங்களுடைய வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு தசம பாகத்தைக் கர்த்தருக்குக் கொடுக்கப் பழகுங்கள். ஒவ்வொரு விசுவாசியும் உங்களுடைய தசம பாகத்தை சரியாக உங்களுடைய ஆலயத்திற்குக் கொடுத்தால், சபைக்கு ஏதாவது வாங்க வேண்டுமென்றால், வேறு யாரையும் ஊழியர்கள் தேடிப் போக வேண்டிய அவசியமே இருக்காது. விசுவாசிகள் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காததினால்தான், இன்றைக்கு சபைகளில் குறைவுகள் காணப்படுகிறது.

தசம பாகத்தைக் கர்த்தருக்கென்று கொடுக்க வேண்டும். **''தசம பாகம் கர்த்தருக்குரியது!''** என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளது. தசம பாகத்தை ஒரு சபையில் கொண்டு போய் நீங்கள் கொடுத்தால்கூட, அதை கை நீட்டி வாங்குகிறவர் நம் கர்த்தர்! கர்த்தர் அதைப் பார்த்து, உங்களை ஆசீர்வதிப்பார்.

ஆனால், அதில் நமக்கு என்ன சுபாவம் என்றால், 1,000 ரூபாய் வருமானம் என்றால், அதனுடைய தசம பாகமான

100 ரூபாயை சுலபமாகக் கொடுத்து விடுவோம். 10,000 ரூபாய் வந்தால்கூட, 1,000 ரூபாய் கொடுத்து விடுவோம். ஆனால், மாதம் ஒரு லட்ச ரூபாய் வருமானம் வருகிறது என்றால், ‘10,000 ரூபாய் கொடுக்க வேண்டுமா?’ என்று நினைக்கிறோம் அல்லவா? அப்படியே நீங்கள், ‘அதைக் கொடுக்க வேண்டும்.’ என்று நினைத்தாலும், உங்கள் வீட்டிலிருக்கிற யாராவது, “10,000 ரூபாய் கொடுக்க வேண்டுமா? நாங்களெல்லாம் அந்தக் காலத்தில் 100 ரூபாய் கொடுத்தாலும் பெரிய காரியம். 10,000 ரூபாய் எதற்குக் கொடுக்க வேண்டும்?” என்று சொல்லக் கூடும்.

. ஒரு சபைப் போதகர், வீடு சந்திக்கப் போனபோது, அந்த வீட்டிலிருந்த சகோதரர், ‘‘பாஸ்டர், எனக்கு ஒரு பிரச்சனையிருக்கிறது. எனக்காக ஜெபம் பண்ணுங்கள்.’’ என்று கேட்டுக் கொண்டார். ‘‘சரி, என்ன பிரச்சனை?’’ என்று அவரிடத்தில் கேட்டதற்கு, ‘‘எனக்கு முதலில் 5,000 ரூபாய் சம்பளம் கிடைத்தது. அதிலிருந்து 500 ரூபாய் தசம பாகத்தைச் சந்தோஷமாக சபைக்குக் கொடுத்தேன். கர்த்தர் என் சம்பளத்தைக் கூட்டி, 10,000 ரூபாயாக ஆசீர்வதித்துக் கொடுத்தார். அதிலிருந்து 1,000 ரூபாய் தசம பாகத்தைத் தவறாமல் கொடுத்துக் கொண்டே வருகிறேன்.

கர்த்தர் இப்பொழுது, என் சம்பளத்தை 20,000 ரூபாயாக ஆசீர்வதித்துக் கொடுத்திருக்கிறார். ஆனால், அதிலிருந்து 2,000 ரூபாய் தசம பாகத்தை எடுத்துக் கொடுக்க, என் மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது. எனக்கு சமாதானமே இல்லை பாஸ்டர், எனக்காக ஜெபம் பண்ணுங்கள்.’’ என்று சொன்னார்.

அதைச் கேட்ட அந்தப் போதகரும், ‘‘சரி அதற்கென்ன? என்ன பிரச்சனையென்றாலும், ஜெபம் செய்தால் சரியாகி விடும்.’’ என்று சொல்லி விட்டு, ‘‘ஆண்டவரே, இவருக்கு 5,000 ரூபாய் சம்பளம் இருக்கும்போது, 500 ரூபாயை எடுத்து, சந்தோஷமாக தசம பாகம் கொடுத்தார். 10,000 ரூபாய் சம்பளம்

**வந்தபோது, 1,000 ரூபாயை தசம பாகமாக எடுத்து. சந்தோஷமாகக் கொடுத்தார்.**

**இப்பொழுது 20,000 ரூபாய் வந்ததினாலே 2,000 ரூபாய் தசம பாகத்தை அவரால் சந்தோஷமாகக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, அவருடைய வருமானத்தை 10,000 ரூபாயாகக் குறைத்து விடும் ஆண்டவரே!'' என்று சொல்லி ஜெபித்தார்.**

**அப்பொழுதுதான் அந்த சகோதரருக்கு, தான் செய்த தவறு புரிந்தது. ''ஐயோ, கர்த்தர் என்னை எவ்வளவாக ஆசீர்வதித்திருக்கிறார்! நான் நன்றியில்லாமல் இருக்கிறேனே!'' என்று சொல்லி, தன் தவறை உணர்ந்து, கர்த்தரிடத்தில் மன்னிப்புக் கேட்டு, தன்னை மீண்டுமாக அர்ப்பணித்துக் கொண்டார்.**

ஆகவே, நாம் கொடுக்கிற தசம பாகத்திலே ஒரு சந்தோஷம் இருக்க வேண்டும்.

**அதனால்தான் கர்த்தர், "கட்டாயமாக அல்ல. மனப்பூர்வமாக, உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தில் காணிக்கையைப் பெற்றுக் கொள்ளுங்கள்." என்று சொல்கிறார். உற்சாகமாகக் கொடுக்கிறதை வைத்துத்தான், கர்த்தர் ஆசீர்வதிப்பார்.**

இன்றைக்கு, சில சபைகள்கூட ஏன் வறுமையில் இருந்து கொண்டிருக்கிறது தெரியுமா? **சபைகள்கூட தசம பாகம் கொடுக்க வேண்டும்.** "சபைகளுக்கு வருகிற தசம பாகத்தில், அவர்களும் தசம பாகம் கொடுக்க வேண்டும்." என்று பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற தேவ ஒழுங்குகளை நாம் கடைப்பிடிக்காததினால்தான் நமக்குப் பணக் கஷ்டம் வருகிறது.

கர்த்தருடைய கிருபையினால், நமது '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியத்தில் இவ்வளவு காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது! அனேகருடைய உள்ளத்தில், "பிரதர் உலகம் முழுவதும் போய் ஊழியம் செய்கிறார். அதனால் கை நிறைய டாலர் டாலராகக் கொண்டு வருகிறார்போல..."

என்று ஒரு தவறான எண்ணம். நாங்கள் அப்படியொன்றும் கொண்டு வருகிறதில்லை.

உண்மையைச் சொல்லப் போனால், எங்கள் சொந்தச் செலவில்தான் எங்களுக்கு டிக்கெட் எடுத்து, நாங்கள் ஊழியம் செய்வதற்குப் போகிறோம். ஊழியத்திற்காகப் போகிற இடங்களிலெல்லாம் காணிக்கை பிரிப்பதுமில்லை, ஊழியத்தின் தேவைகளைக் குறித்துச் சொல்வதுமில்லை. மூன்று நாட்கள் சாப்பிடாமல் உபவாசமிருந்து தேசங்களுக்காக ஜெபித்து விட்டு வருகிறோம், அவ்வளவுதான்! அவர்களில் யாராகிலும் கர்த்தரால் ஏவப்பட்டால் காணிக்கை அனுப்புவார்கள், அவ்வளவுதான்! இதுதான் உண்மை! “அப்படியானால், எப்படி இவ்வளவு ஊழியங்கள் நடக்கிறது?” என்று கேட்டால், ஒரு இரகசியத்தை நான் உங்களுக்குச் சொல்கிறேன். நான் ஊழியம் செய்ய ஆரம்பித்த நாட்களில், “உன் ஊழியத்திற்கு வரக் கூடிய காணிக்கையிலிருந்து மாதந்தோறும் தசம பாகத்தை எடுத்து, மற்ற ஊழியத்திற்கு அனுப்பு.” என்று கர்த்தர் சொன்னார்.

“இயேசு விடுவிக்கிறார்’ ஊழியத்திற்கு வருகிற காணிக்கைகளை எல்லாம், கைப் பிரதிகளுக்கும், சுவிசேஷ ஊழியத்திற்கும், மிஷனெரி ஊழியத்திற்கும்தானே செலவு பண்ணுகிறோம்! இதுவும் ஊழியம்தானே!” என்று சொன்னபோது, “அப்படியல்ல, உங்களுக்கு வரக் கூடிய காணிக்கையில் தசம பாகத்தை எடுத்து, மற்ற ஊழியங்களுக்குக் கொடு.” என்று கர்த்தர் சொன்னார்.

கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு அப்படியே நாங்கள் கீழ்படிந்து, ஊழியத்திற்கு வரக் கூடிய காணிக்கையிலிருந்து தசம பாகத்தை எடுத்து, ‘மிஷனெரி ஊழியம், போதகர்கள் மற்றும் சில கிராமங்களிலே சபை கட்டுவதற்குக் கஷ்டப்படுகிற ஊழியர்களுக்கு...’ என்று, ஜெபித்து, கர்த்தர் யார் யாருக்கு அனுப்பச் சொல்வாரோ, அவர்களுக்கு அனுப்புவோம். அதனால்தான் நமது, ‘இயேசு விடுவிக்கிறார்’ ஊழியத்தில் இவ்வளவு பெரிய ஆசீர்வாதம்!

எங்களுக்கு என்ன தேவையோ, அதைக் கர்த்தர் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார். எங்கள் ஊழியத்தில் குறைவேயில்லை. நான் ஊழியத்திற்கு என்னை ஒப்புக் கொடுத்தபோது, “ஆண்டவரே, எனக்கு 5 பைசா வேண்டுமென்றால்கூட, உம்மிடத்தில்தான் கேட்பேன். என் பெற்றோரிடமோ, அல்லது வேறு எந்தவொரு மனிதனிடமோ நான் கேட்க மாட்டேன். நீர்தான் எனக்குப் பொறுப்பு.” என்று ஜெபத்தில் சொன்னேன்.

அதற்குக் கர்த்தர், நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதே! அன்றன்றைக்குள்ள தேவையை நான் சந்திப்பேன்!” என்று எனக்கு வாக்குக் கொடுத்தார். காரணம், அவர் உண்மையுள்ள தேவன்!

என்னுடைய இத்தனை வருட ஊழியத்தின் பாதையில், எங்களுக்கு மிச்சமும் கிடையாது, எந்தக் கடன் பிரச்சனையும் கிடையாது. அன்றன்றைக்கு என்ன தேவையோ, அதைக் கர்த்தர் தந்து கொண்டிருக்கிறார். “நாளைக்கு இவ்வளவு தேவை இருக்கிறது ஆண்டவரே!” என்று அவருடைய சமூகத்திற்குப் போய் ஜெபித்துக் கேட்டால், அதைத் தருவார், அவ்வளவுதான். மிச்சமும் தர மாட்டார்! கஷ்டப்படுத்தவும் மாட்டார்! அவர் குறைவில்லாமல் நடத்துகிற கர்த்தர்! இதுதான் ஆசீர்வாதம்!

கர்த்தர் மீதுள்ள அன்பினாலும், அவருடைய கட்டளைக்குக் கீழ்படிந்தும், உங்கள் வருமானத்தில் பத்தில் ஒன்றை (தசம பாகத்தை) கர்த்தருக்கு ஒழுங்காக நீங்கள் கொடுத்து வந்தால், கர்த்தர் வாக்குக் கொடுத்தபடியே, வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்களை ஆசீர்வதிப்பார்.

உங்கள் வீட்டிலே வீண் செலவுகள் வராது, தொழிலிலே நஷ்டம் வராது, உங்கள் வருமானம் வட்டிக்குப் போகாது, பணப் பிரச்சனைகள் இருக்காது. உங்கள் வருமானத்தைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்! **உங்கள் பணப் பிரச்சனை மாறும்!**

**விசுவாசத்தோடு ஜெபியுங்கள்!**



**ஆசீர்வதிக்கும் ஆண்டவரே, உமக்கு ஸ்தோத்திரம்! என்னை ஆசீர்வதித்து, என் பணப் பிரச்சனையை மாற்ற நீர் வல்லவராயிருக்கிறீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன்.**

**நான் உம்மை நேசிக்கிறேன்! என்னை நீர் நேசித்து, எனக்காக உம் ஜீவனையே கொடுத்தீரே! நானும் உம்மை நேசித்து, காணிக்கை கொடுக்க என்னை அர்ப்பணிக்கிறேன்!**

**கடமைக்காகக் கொடுக்காதபடி, உம்முடைய கட்டளையின்படி தசம பாகம் கொடுக்க என்னை ஒப்புக் கொடுக்கிறேன்! தசம பாகம் கொடுக்காத என் பாவங்களை எனக்கு மன்னியும்! கொடுப்பதில் உம்மை வஞ்சித்து விட்ட என் பாவங்களை மன்னித்து விடும்!**

**இனிமேல் உம்முடைய கட்டளைக்குக் கீழ்படிய என்னை ஒப்புக் கொடுக்கிறேன்! நான் தசம பாகம் கொடுப்பதை நீர் அங்கீகரித்து, வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் ஆசீர்வதிப்பீர் என்பதை விசுவாசிக்கிறேன்!**

**என் பணப் பிரச்சனை, கடன் பிரச்சனைகள் மாற, நீர் என்னை ஆசீர்வதிக்கிறதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்! ஆமென்!**

# கடனில்லாத, குறைவில்லாத, செழிப்பான சுக வாழ்வைப் பெற்றுக் கொள்வது எப்படி?

ஒரே நிறுவனத்தில் வேலை செய்கிற இரண்டு சகோதரர்களை எனக்குத் தெரியும். அவர்கள் இருவரும் இரட்சிக்கப்பட்ட தேவப் பிள்ளைகள்தான். இருவரும் வேதாகமத்தை வாசித்து ஜெபிக்கிறவர்கள்தான்.

அதில் ஒரு சகோதரன், கணவனும்–மனைவியுமாக இரண்டு பேருமே வேலை செய்து சம்பாதிக்கிறவர்கள். ஒருநாள், அந்த சகோதரனோடு நான் பேசிக் கொண்டிருந்தபோது, “உங்கள் பொருளாதார நிலைமை எப்படி இருக்கிறது? வாங்குகிற சம்பளம் உங்கள் வாழ்க்கைக்குப் போதுமானதாக இருக்கிறதா?” என்று விசாரித்தேன்.

அதற்கு அவர், “நாங்கள் இரண்டு பேர் சம்பாதித்தும்கூட ஒரு மிச்சமுமில்லை! அந்தந்த மாதத் தேவைக்கே கஷ்டமாகத்தான் இருக்கிறது. மாதக் கடைசி வரும்போது, கடன் வாங்குகிற சூழ்நிலைதான் உண்டாகிறது...!” என்று வேதனையோடு சொன்னார். தான் ஒருவர் மட்டுமே வேலை செய்து சம்பாதிக்கிற இன்னொரு சகோதரனை, நான் ஒருநாள் சந்தித்த

**வேளையில், ''உங்கள் பொருளாதார நிலைமை எப்படி இருக்கிறது?'' என்று விசாரித்தேன். அப்போது அவர், ''பிள்ளைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறபடியினால், என் மனைவி வேலை செய்யவில்லை. என் ஒருவனுடைய வருமானம்தான் இருக்கிறது.**

**நான் சம்பளம் வாங்கியதும், அதை இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் வைத்து ஜெபித்து, தசம பாகத்தை (பத்தில் ஒன்று) கர்த்தருக்கென்று எடுத்து வைத்து விடுவேன். மீதிப் பணத்தை ஜெபத்தோடு வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவோம். கர்த்தர் எங்களைக் குறைவில்லாமல் நடத்துகிறார். கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் இல்லை. மீதியைச் சேமித்து வைக்கிற அளவு ஆசீர்வதித்திருக்கிறார்.'' என்று மகிழ்ச்சியோடு கூறினார்.**

"வீட்டிற்குள் எவ்வளவு பணம் வருகிறது?" என்பதல்ல முக்கியம். **வருமானத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்க வேண்டும்!**

கர்த்தர் ஆசீர்வதிக்கும்போது, கடனில்லாத, செழிப்பான, நிரம்பி வழிகிற ஆசீர்வாதம் உண்டாயிருக்கும்.

ஆனால் இன்று அனேகக் குடும்பங்களில், இந்தப் பொருளாதார ஆசீர்வாதம் இல்லை! நிரம்பி வழிகிற ஆசீர்வாதம் இல்லை! எப்பொழுதும் 'பணக் கஷ்டம்!', 'கடன் பிரச்சனை!', 'தேவைகள்!' என்று கலங்கிக் கொண்டிருக்கிறவர்கள்தான் அதிகம்.

இன்றைக்கு நீங்களும் பணப் பிரச்சனையினால் கலங்கி நிற்கிறீர்களா?

இந்தச் செய்தியின் மூலம், கர்த்தர் இன்றைக்கு உங்களோடுதான் பேசுகிறார்! **கர்த்தர், உங்கள் பணப் பிரச்சனைகளை மாற்ற விரும்புகிறார்!** உங்களை நிரம்பி வழியும்படி ஆசீர்வதிக்க விரும்புகிறார்!

இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள, என்ன செய்ய வேண்டும்?

# கொடுக்க வேண்டும்!

**“கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்;” லூக்கா 6:38.**

**“கேளுங்கள்,...உங்களுக்குக் கொடுக்கப்படும்;” (மத்தேயு 7:7)** என்று சொன்ன இயேசு கிறிஸ்து, **“கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்!”** என்றும் சொல்லியிருக்கிறார். கேட்கும்போது, நாம் கேட்பதுதான் கிடைக்கும். ஆனால் நாம் கொடுக்கும்போது, சரிந்து விழும்படி, அதாவது, “நிரம்பி வழியும்படி நமக்குக் கொடுக்கப்படும்!” என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

ஆகவேதான், “...**வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்...” (அப். 20:35)** என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். கொடுக்கிறதினால் உண்டாகிற ஆசீர்வாதம் பெரியது!

நம்மில் அனேகர், கொடுக்கிறதினால் உண்டாகும் ஆசீர்வாதங்களை அறியாதிருக் கிறபடியினால்தான், வறுமையிலும், பணக் கஷ்டத்திலும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

கொடுக்கிறதினால் உண்டாகும் ஆசீர்வாதங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்! “எப்படிக் கொடுக்க வேண்டும்?” என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்! தேவாலயத்தில் கர்த்தருக்குக் காணிக்கை கொடுத்த, ஒரு ஏழை விதவையைக் குறித்து இயேசு கிறிஸ்துவே சாட்சி கொடுத்தார்.

**“இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம்**

**போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்.**

**ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப்போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.'' மாற்கு 12:41–44.**

பலர் காணிக்கை கொடுத்தாலும், அந்த ஏழை விதவை கொடுத்த காணிக்கையைக் குறித்துத்தான் இயேசு கிறிஸ்து சாட்சி கொடுத்தார்!

காரணம், அவள் கர்த்தர் மீதுள்ள தன் அன்பினால் கொடுத்தாள்! கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்படிந்து கொடுத்தாள்! தியாகத்தோடு கொடுத்தாள்! **தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த எல்லாவற்றையும் கொடுத்தாள்!**

அது மாத்திரமல்ல, **விசுவாசத்தோடு கொடுத்தாள்!**

# விசுவாசத்தோடு கொடுத்தாள்!

**“...இவளோ (அந்த விதவை) தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள்.'' மாற்கு 12:44.**

தன்னிடத்தில் இருந்த அந்தக் கடைசி இரண்டு காசையும், கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொடுத்து விட்டாள்! “அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது?” என்று அவள் யோசிக்கவேயில்லை.

"என் தேவைகளைக் கர்த்தர் பார்த்துக் கொள்வார். **நான் கர்த்தருக்குக் கொடுத்தால், வானத்தின் பலகணிகளைத் திறந்து இடம் கொள்ளாமற்போகுமட்டும் அவர் ஆசீர்வதிப்பார்.**" என்று விசுவாசித்தாள். **(மல்கியா 3:10).** அந்த விதவைத் தாய் கர்த்தருடைய வார்த்தையை, வல்லமையை விசுவாசித்துக் கொடுத்தாள்.

நான் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்ட பிறகு, "ஆலயத்திற்குப் போகும்போதெல்லாம், வெறும் கையோடு செல்லக் கூடாது. காணிக்கை பை என்னிடத்தில் வரும்போது, ஏதாவது காணிக்கை போட வேண்டுமே!" என்று எண்ணி, காணிக்கை கொண்டு செல்வேன். கொடுப்பதினால் வரும் ஆசீர்வாதத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், **லூக்கா 6:38**ம் வசனத்தின் அர்த்தத்தை நான் புரிந்து கொண்ட பிறகு, கர்த்தருக்குக் கொடுப்பதில் எனக்குப் பெரிய உற்சாகம் உண்டாயிற்று. "**கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்;" (லூக்கா 6:38)** என்று இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தையின் ஆசீர்வாதத்தை, நான் என் வாழ்க்கையில் காண ஆரம்பித்தேன்.

**என் ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் ஒருநாள், சைக்கிளில் பொருட்களை வைத்துக் கொண்டு, தெருத் தெருவாகச் சென்று வியாபாரம் செய்கிற ஒரு சகோதரர் என்னைப் பார்த்து ஜெபிக்க வந்தார். நான் அவரிடத்தில், ''நீங்கள் ஒரு கடை வைத்து, வியாபாரம் செய்யலாமே!'' என்று கேட்டபோது, ''அதற்குப் பண வசதியில்லையே...'' என்று சொன்னார்.**

**ஜெபித்து முடிந்ததும், எனக்கு ஒரு 50 ரூபாயை காணிக்கையாகக் கொடுத்தார். அதை நான் கையில் வாங்கி ஜெபிக்க ஆரம்பித்தபோது, அவரோடு பேசும்படி பரிசுத்த ஆவியானவர் என்னை**

ஏவியபடியினால், ‘‘இந்த 50 ரூபாய் காணிக்கையை எதற்காகக் கொடுக்கிறீர்கள்?’’ என்று கேட்டேன்.

‘‘கர்த்தர் என் வியாபாரத்தை ஆசீர்வதித்து, எங்களைப் போஷித்து வருகிறார். வருகிற வருமானத்திலிருந்து 50 ரூபாயைக் கர்த்தருக்குக் கொடுக்கிறேன்!’’ என்றார். நான் மறுபடியும் அவரைப் பார்த்து, ‘‘என்ன விசுவாசத்தோடு இதைக் கர்த்தருக்குக் கொடுக்கிறீர்கள்?’’ என்று கேட்டபோது, யோசிக்க ஆரம்பித்தார்.

சற்று நேரம் கழித்து, ‘‘இதில் என்ன விசுவாசிக்க வேண்டும்? கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதத்தில் ஒரு பங்கை அவருக்குக் காணிக்கையாகக் கொடுக்கிறேன், அவ்வளவுதான்!’’ என்றார்.

உடனே நான், வேதாகமத்திலிருந்து **லூக்கா 6:38**ம் வசனத்தை எடுத்து அவருக்கு வாசித்துக் காண்பித்து, ‘‘நாம் கொடுக்கும்போது, அமுக்கிக் குலுக்கி, சரிந்து விழும்படி நமக்குக் கொடுக்கப்படும்!’ என்று இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார். அதாவது, ‘**நாம் கர்த்தருக்குக் கொடுப்பதை, அவர் பல மடங்காக நமக்குத் திரும்பத் தருவார்!**’ என்று சொல்கிறார். இயேசு கிறிஸ்துவின் இந்த வார்த்தையை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?’’ என்று கேட்டேன்.

அதற்கு அவர், ‘‘நான் விசுவாசிக்கிறேன்!’’ என்றார். ‘‘அப்படியானால், நீங்கள் ஊழியத்திற்குக் கொடுத்த இந்த 50 ரூபாயை கர்த்தர் பல மடங்காக உங்களுக்குத் திருப்பித் தருவார் என்பதை விசுவாசிக்கிறீர்களா?’’ என்று நான் அவரிடத்தில் மறுபடியும் கேட்டபோது, ‘‘கர்த்தர் எனக்குத் திரும்பத் தருவார்!’ என்று எண்ணி நான் கொடுப்பதில்லை.

அவர் எனக்குக் கொடுத்ததில் ஒரு பங்கை அவருடைய ஊழியத்திற்குக் கொடுக்கிறேன்.’’ என்று சொன்னார். அதற்கு நான், ‘‘இதுவரை நீங்கள் அப்படிக்

கொடுக்கவில்லை. இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிற வார்த்தையை இன்றைக்கு நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?'' என்று அவரிடத்தில் கேட்டேன். சற்று நேரம் அவர் யோசித்து விட்டு, ''இயேசு கிறிஸ்து சொன்னால் அப்படியே நடக்கும்! நான் கர்த்தருக்கென்று கொடுத்த இந்த 50 ரூபாய் காணிக்கையை அவர் ஆசீர்வதித்து, பல மடங்காக அவர் எனக்குத் திரும்பத் தருவார் என்று விசுவாசிக்கிறேன்!'' என்றார்.

உடனே நான் அந்தக் காணிக்கையை கர்த்தருடைய கரத்தில் கொடுத்து, ''இயேசுவே, நீர் சொன்ன **லூக்கா 6:38**ம் வசனத்தின்படி, இந்த சகோதரனை ஆசீர்வதியும்...'' என்று சொல்லி ஜெபித்து அனுப்பினேன்.

இரண்டு வாரங்கள் கழித்து, அதே சகோதரர் மறுபடியும் என்னைப் பார்க்க வந்தார். ''நீங்கள் சொன்ன மாதிரியே, **லூக்கா 6:38**ம் வசனத்தின்படி, எனக்கு ஒரு அற்புதம் நடந்தது!'' என்றார்.

'எப்படி?' என்று நான் அவரிடத்தில் கேட்டபோது, ''என் மாமனார் நல்ல வசதியுள்ளவர்! அவர் நினைத்தால், நான் கடை வைத்து வியாபாரம் செய்ய எனக்கு உதவி செய்ய முடியும். ஆனால் அவர் செய்ய மாட்டார். யாருக்கும் எந்த உதவியும் செய்ய மாட்டார். படு கஞ்சன்!

சில நாட்களுக்கு முன்பு, திடீரென்று ஒருநாள் அவர் என் வீட்டிற்கு வந்தார். என் கையில் 15,000 ரூபாயைக் கொடுத்து, ''இதை வைத்து வியாபாரம் செய்யுங்கள்!'' என்று சொல்லி விட்டுப் போனார்.

என்னால் நம்பவே முடியவில்லை. இது இயேசு கிறிஸ்து செய்த அற்புதம்தான். நான் கர்த்தருக்கு 50 ரூபாய் கொடுத்தேன். அவர் அதை 15,000 ரூபாயாகத் திரும்பக் கொடுத்தார். கொடுப்பதினால் வரும் ஆசீர்வாதத்தை நான் புரிந்து கொண்டேன்!''

**என்றார்.** பாருங்கள், அவர் கர்த்தருக்குக் கொடுத்ததைக் கர்த்தர் ஆசீர்வதித்து, 300 மடங்காக அவருக்குத் திருப்பிக் கொடுத்தார்.

# விதைப்பும், அறுப்பும்!

**“...சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.**

**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.” 2 கொரி. 9:6,7.**

‘கர்த்தருக்குக் கொடுப்பது, நிலத்தில் விதைக்கும் விதைக்குச் சமானம்!’ என்று மேற்கண்ட வேத வசனம் சொல்கிறது. விதைத்தால்தான் அறுவடையைக் காண முடியும். கொஞ்சம் விதைக்கிறோம், ஆனால் பல மடங்கு அறுவடை செய்கிறோம்!

முதலாவது விதைக்க வேண்டும், பின்புதான் ஏற்ற காலத்தில் அறுவடையைக் காண முடியும்.

பூர்வக் காலத்தில், “கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதத்தில் பத்தில் ஒன்றை கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும்.” என்று சொல்லப்பட்டது.

ஆனால், இயேசு கிறிஸ்து சொல்லும்போது, **“முதலாவது கொடுங்கள்**, நீங்கள் கொடுப்பது **பல மடங்காக உங்களுக்குக் கொடுக்கப்படும்.” (லூக்கா 6:38)** என்று சொன்னார்.

தொழில் செய்கிற ஒரு சகோதரனை எனக்குத் தெரியும். ஒரு சமயம், அவர் தன் அனுபவத்தை என்னிடத்தில் பகிர்ந்து கொண்டார்.

**ஒரு ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த அவர், தன்னிடத்திலிருந்த கொஞ்சப் பணத்தை வைத்து, தொழிலை ஆரம்பித்தார். ஆட்களை வைத்து**

பொருட்களைத் தயாரித்து, கடை கடையாகச் சென்று விற்பனை செய்வார். விற்ற பணத்தில் அடுத்த நாள் வியாபாரத்திற்கான பொருட்களை வாங்கிக் கொண்டு வருவார். வரவுக்கும், செலவுக்கும் சரியாக இருக்கும். மிகுந்த கஷ்டத்தோடு நாட்களைக் கழித்தார்.

சில சமயங்களில், கர்த்தருடைய ஊழியர்கள் அவரைச் சந்தித்து ஜெபிக்க வருவார்கள். ஜெபித்த ஊழியக்காரருக்கு ஒரு 100 ரூபாய்கூடக் காணிக்கை கொடுக்க அவருக்கு வழியில்லை. 100 ரூபாயை எடுத்து விட்டால், தொழிலுக்கான முதல் பாதிக்கப்படும். அடுத்த நாள் வியாபாரத்திற்குத் தேவையான பொருட்களை வாங்க முடியாது. ''தேவ ஊழியர்களுக்குக் காணிக்கை கொடுக்க முடியவில்லையே!'' என்று மிகவும் வருத்தப்படுவார். அதனிமித்தம், 'ஆண்டவரே, உம்முடைய ஊழியர்களுக்குக் காணிக்கை கொடுக்கத் தக்கதாக என்னை ஆசீர்வதியும்!' என்று அடிக்கடி ஜெபிப்பார்.

ஒருநாள், ஒரு ஊழியக்காரர் வந்து அவருக்காக ஜெபித்தபோது, அந்த ஊழியக்காரருக்கு ஒரு 100 ரூபாய் காணிக்கை கொடுக்கும்படியாகக் கர்த்தர் அவரை ஏவினார்.

ஆனால் அவரோ, ''100 ரூபாய் கொடுத்து விட்டால், அடுத்த நாள் வியாபாரத்திற்கு என்ன செய்வது?'' என்று எண்ணிக் கலங்கினார்.

உடனே கர்த்தர், ''முதலாவது உன்னிடத்தில் உள்ளதில் என் ஊழியக்காரனுக்குக் கொடு.'' என்று கர்த்தர் அவரோடு பேசினார். அவரும் கர்த்தருடைய குரலுக்குக் கீழ்படிந்து, தன் தேவைக்கு மத்தியிலும் 100 ரூபாய் எடுத்து, அந்த ஊழியக்காரரிடத்தில் காணிக்கையாகக் கொடுத்தார்.

அன்றுமுதல், அவருடைய தொழிலில் ஆசீர்வாதம் உண்டாக ஆரம்பித்தது. வாரந்தோறும் 100 ரூபாய் காணிக்கை கொடுக்க ஆரம்பித்தார். கர்த்தர்

**அவரை ஆசீர்வதித்து, பெருகப் பண்ணினார்! வாரந்தோறும் 1,000 ரூபாய் காணிக்கை கொடுத்தார். கர்த்தர் ஆசீர்வதித்தார்! வாரம் தோறும் 5,000 ரூபாய் காணிக்கை கொடுக்க ஆரம்பித்தார். கர்த்தர் இன்னும் ஆசீர்வதித்தார்! இப்பொழுது வாரந்தோறும் 50,000 ரூபாய் காணிக்கை கொடுக்கும்படியாகக் கர்த்தர் அவரை ஆசீர்வதித்து, அவருடைய தொழிலை பெருகப் பண்ணியிருக்கிறார்!**

பாருங்கள், விதைக்க விதைக்க, அவர் அறுவடையின் ஆசீர்வாதத்தைக் கண்டார். "கர்த்தருக்குக் கொடுக்கும்போது, திரும்பத் தருவார்!' என்கிற ஒரு எதிர்பார்ப்போடு கொடுக்கக் கூடாது." என்று சிலர் சொல்வார்கள்.

அறுவடையை எதிர்பார்க்காமல் யாராவது விதைப்பார்களா? "எனக்கு அறுவடையெல்லாம் முக்கியமல்ல, விதைத்துக் கொண்டேதான் இருப்பேன்!" என்று யாராவது சொன்னால், அவர்களைக் குறித்து நீங்கள் என்ன சொல்வீர்கள்? கர்த்தருக்குக் கொடுப்பதை, **"...சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்." (2 கொரி. 9:6)** என்று வேத வசனம் சொல்கிறதே! **"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்;" (லூக்கா 6:38)** என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறாரே!

"விதைத்தால் அறுவடை உண்டாகும்! **கர்த்தருக்குக் கொடுத்தால், பல மடங்காகத் திரும்பத் தருவார்!**" என்று எதிர்பார்ப்பது, வேத வசனத்தின்படி சரியான ஒரு விசுவாசம்தான்.

இப்படியாக, விசுவாசிக்கிறவர்களுக்கு, கர்த்தர் பல விதமான ஆசீர்வாதங்களாகத் திரும்பத் தருகிறார்.

**அப்படியாகக் கர்த்தருக்காகக் கொடுத்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட பலர், எங்களுக்கு எழுதிக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்களில் சிலருடைய அனுபவங்களை வாசித்துப் பாருங்கள்:**

## சொந்தமாக வீடு தந்தார்!



"சில வருடங்களாக, **ஒரு சொந்த வீடு வாங்க** வேண்டுமென்று **எவ்வளவோ பிரயாசப்பட்டும்**, அந்தக் **காரியம் வாய்க்கவில்லை.** இந்நிலையில், மிகுந்த விசுவாசத்தோடு திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, **தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காக**, ₹ 1,000 காணிக்கை கொடுத்து விட்டுப் போனேன். கர்த்தர் என் காணிக்கையை அங்கீகரித்து, சுமார் **11 லட்ச ரூபாய் மதிப்பில் சொந்தமாக ஒரு வீடு வாங்க**வும், அதில் சந்தோஷமாகக் குடியேறவும் கிருபை செய்தார்."
– **S. வில்சன்**, தூத்துக்குடி.

## 21 லட்ச ரூபாய் மதிப்பில்...



"நாங்கள் சுமார் **17 வருடங்களாக வாடகை வீட்டில்**தான் குடியிருந்து வந்தோம். இதற்கிடையில் ஒரு சொந்த வீடு வேண்டி, பொருத்தனையோடுகூட **தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்கு காணிக்கை** அனுப்பி வைத்தோம்.

கர்த்தர் எங்கள் காணிக்கையை அங்கீகரித்து, மிகவும் ஆச்சரியமாக, சுமார் **21 லட்ச ரூபாய் மதிப்பில் ஒரு அழகான வீட்டை சொந்தமாக வாங்கக்** கிருபை செய்தார்." – **A. நெகேமியா பன்னீர் செல்வம்,** மணச்சநல்லூர்–திருச்சி.

## ₹ 14½ லட்சம் கடன் தீர்ந்தது!

"தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு, சுமார் ₹ **14½ லட்சம் கடன்** ஆகி விட்டது. என் **கையில் ஒன்றுமே**



**இல்லாத நிலை**யில், என் தகப்பனாரின் உதவியில், நாகர்கோவிலில் ஒரு STD Booth வைத்து, அதிலிருந்து **தவறாமல் தசம பாகத்தைக் கொடுத்து வந்தேன்.** கடைக்கு வருகிறவர்களிடத்தில் **சுவிசேஷம் சொல்ல ஆரம்பித்தேன். கர்த்த**ர் என்னை உயர்த்த ஆரம்பித்தார்.

வட இந்தியாவில் **ஆலயம் கட்டுவதற்காகக் காணிக்கை கொடுக்க ஆரம்பித்தேன்.** ஆலயம் கட்டி முடிப்பதற்கு முன், என் **கடன் முழுவதுமாகத் தீர்ந்தது.**

மாத்திரமல்ல, அனேக **மிஷனெரிகளைத் தாங்கவும், ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கவும், அனேக ஊழியங்களைத் தாங்கவும்** கர்த்தர் கிருபை செய்து வருகிறார்.

அதனிமித்தம், கர்த்தர் என்னை உயர்த்திக் கொண்டேதான் இருக்கிறார். மட்டுமல்ல, வெறும் 1,000 ரூபாயை வைத்துக் கொண்டு கட்ட ஆரம்பித்த என் வீட்டை, **55 லட்ச ரூபாய் மதிப்பில்** கட்டி முடிக்கக் கர்த்தர் கிருபை செய்தார்." – **சாம் மோகன்ராஜ்,** நாகர்கோவில்.

## தசம பாகத்தின் பலன்!

நான் 600 ரூபாய் சம்பளத்திற்கு ஒரு கடையில் வேலை செய்து கொண்டிருந்தேன். அதிலும் ₹ 60 **தசம பாகத்தை** எடுத்து, ஒரு பங்கை **சபைக்கும்**, ஒரு பங்கை **ஏழைகளுக்கும் கொடுக்க** ஆரம்பித்தேன்.



கையில் வேறேதும் **பணமே இல்லாத அந்தச் சூழ்நிலையிலும்**, ₹ 4½ லட்சத்துக்கு **ஒரு கடையைச் சொந்தமாக வாங்குவதற்குக்** கர்த்தர் அதிசயமாக வழி வாசலைத் திறந்து கொடுத்தார்.

அந்தக் கடை மூலமாக வந்த வருமானத்திலும் **தசம பாகத்தை** எடுத்து,

ஒரு பகுதியை **ஏழைகளுக்கும்**, ஒரு பகுதியை **மிஷனெரிகளுக்கும் கொடுக்க** ஆரம்பித்தேன்.

அதனிமித்தம் கர்த்தர் இன்னும் அதிகமாக ஆசீர்வதித்து, **Medical Store** நடத்தவும், **Whole sale** வியாபாரம் செய்யவும், அதன் மூலமாக **ஒவ்வொரு மாதமும்** சுமார் ₹ **30 ஆயிரம் வருமானம்** வருகிற அளவிற்கு ஆசீர்வதித்திருக்கிறார். – **மகேஷ்,** ஊட்டி. **(M/s. Mesia Pharmacy).**

## ஆலயம் கட்டுவதற்கு...

1992ம் ஆண்டு **மிகவும் கஷ்டமான சூழ்நிலை**யில் திருப்பூருக்குப் போய், பல இடங்களில் வேலை செய்தேன். கடைசியில் ஒரு 'கார்மென்ட்' கம்பெனியைத் தொடங்கினேன். ஆனால், ஒரு ஆசீர்வாதமும் இருந்ததில்லை. இந்நிலையில் நான் இயேசு கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக் கொண்டபடியினால், கர்த்தர் என்னை பல விதங்களில் ஆசீர்வதிக்க ஆரம்பித்தார்.



**ஆலயம் கட்டுவதற்கு,** முதன்முதலாக, ஒரு சிறு **காணிக்கையைக் கொடுக்கக்** கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார்.

அந்த நேரத்தில் புதிதாக நான் தொழில் ஆரம்பித்திருந்தாலும்கூட, ₹ **30 லட்சத்திற்கு திருப்பூரில் ஒரு இடம்** வாங்கக் கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருடைய ஊழியத்தைத் தாங்கியதின் காரணமாக, **நான்கு கம்பெனியாகக்** கர்த்தர் வளர்ச்சியடையப் பண்ணினார். இப்பொழுது **500 பேர் வேலை செய்கிறார்கள்**. 2006ல், **"Stitch Fashion"** என்ற ஒரு கம்பெனி ஆரம்பிக்கவும், 2008ல், **"Export House!"** என்ற **விருது** எங்களுக்குக் கிடைக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். – **எடிசன் தேவராஜ்,** திருப்பூர்.

## இயன்றதைக் கொடுத்தேன்!

நான் சென்னைப் பட்டணத்தில் 300 ரூபாய் **சம்பளத்திற்கு வேலை** செய்து வந்தேன். திடீரென்று வியாதிப்பட்டு, மரணப் படுக்கையில் இருந்த சமயத்தில் நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, கர்த்தர், '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியத்தைக் குறித்து எனக்கு உணர்த்தி, "உன்னால் இயன்ற காணிக்கையை **மிஷனெரி ஊழியத்திற்கு மாதந்தோறும் நீ கொடுக்க வேண்டும்.**" என்று கட்டளையிட்டார்.



என் குடும்பம் மிகவும் **கஷ்டப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும்**, கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்படிந்து, என்னுடைய வருமானத்தில் **தசம பாகத்தை எடுத்து காணிக்கை கொடுக்க ஆரம்பித்தேன்.** அதனிமித்தம் கர்த்தர் எனக்கு சுகத்தைக் கொடுத்து, வேலையிலும் உயர்வைக் கட்டளையிட்டு, **Car Water Wash** பண்ணுகிற ஒரு தொழிலைச் செய்யவும், **Driving School** ஆரம்பித்து நடத்தவும் கிருபை செய்து, என்னை ஆசீர்வதித்து வருகிறார். – **ஜெயராஜ்,** சென்னை.

## கர்த்தரின் ஆசீர்வாதங்கள்!

**மிகுந்த கஷ்டத்தின் மத்தியில்**, ஓசூரில் ஒரு மளிகைக் கடையை ஆரம்பித்தோம். ஒரு **30 ரூபாய்கூட காணிக்கை கொடுக்க முடியாத அந்தச் சூழ்நிலை**யிலும், வந்த வருமானத்தில் **தசம பாகத்தை** எடுத்து ஊழியங்களுக்குக் **கொடுத்து வந்தோம்.** கர்த்தர் ஆசீர்வதித்து, ₹ **18 லட்சம் மதிப்புள்ள ஒரு வீட்டைக் கட்டி முடிக்கக்** கிருபை செய்தார். மாத்திரமல்ல, ஒரு **சூப்பர் மார்கெட்** வைக்கவும் கர்த்தர் வழி வாசலைத் திறந்து கொடுத்தார்.



அதிலிருந்தும் **தசம பாகத்தை** எடுத்து **ஊழியங்களுக்குக் கொடுக்க**வும், அனேக **ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க**வும், **மிஷனெரிகளைத் தாங்கி**யும் வருகிறோம். அதனிமித்தம் கர்த்தர் எங்களைப் பல மடங்கு ஆசீர்வாதமாக நடத்தி வருகிறார். – **ஜெயா தேவ சகாயம்**, ஓசூர்.

# விசுவாச வித்து!

நாம் கர்த்தருக்குக் கொடுப்பதை, விசுவாச வித்தாக விதைக்கிறோம். அது ஏற்ற காலத்தில் விளைந்து, பல மடங்காக நமக்குப் பலன் தரும்.

பாருங்கள், சில விதைகள் மூன்று மாதங்களில் பலன் தந்து விடும்! சில விதைகள், ஆறு மாதங்களில் பலன் தரும்! சில விதைகள், அறுவடையைக் கொடுக்க ஒரு வருடம்கூட ஆகலாம்! என்றாலும், அறுவடை நிச்சயமே!

பொதுவாக, விவசாயிகள் விதை விதைக்கும்போது, கண்ட இடத்திலும் விதைப்பதில்லை. ரோட்டிலே விதைத்து விட்டு, 'அறுவடை வரும்!' என்று காத்திருந்தால், அது முட்டாள்தனம்! "நல்ல நிலத்தில் விதைக்கும்போதுதான் பலன் வரும்!" என்று இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார். **(லூக்கா 8:8).**

அப்படியே கர்த்தருக்குக் கொடுக்கும்போதுகூட, "இது பலன் தரக்கூடிய நல்ல நிலம்தானா?" என்று பார்த்து விதைக்க வேண்டும். நீங்கள் கொடுக்கிற காணிக்கை, 'கர்த்தருக்காக, சுவிசேஷத்திற்காகச் செலவு செய்யப்படுகிறதா?' என்று கவனித்துக் கொடுக்க வேண்டும்.

நீங்கள் கொடுக்கும் காணிக்கை, உங்கள் சபை வளர்ச்சிக்காக, சுவிசேஷத்தின் பிரபல்யத்திற்காக, கர்த்தருடைய ராஜ்ஜியம் கட்டப்படுவதற்காகச் செலவு

செய்யப்பட்டால், கொடுத்த உங்களை பல மடங்காகக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்!

'**கொடுங்கள்!**' என்று சொல்லும்போது, காணிக்கையாகப் பணத்தைக் கொடுப்பது மட்டுமல்ல, உங்கள் நேரத்தைக் கொடுக்கலாம்! உங்கள் தாலந்துகளைக் கொடுக்கலாம்! உங்கள் உழைப்பைக் கொடுக்கலாம்! உங்கள் அன்பைக் கொடுக்கலாம்! கர்த்தருடைய மகிமைக்கென்று நீங்கள் எதைக் கொடுத்தாலும், கர்த்தர் உங்களைப் பல மடங்காக ஆசீர்வதிப்பார்.

நீங்கள் கர்த்தருக்கென்று கொடுப்பதை, 'பணமாகத்தான் திரும்பத் தருவார்!' என்று எண்ணாதிருங்கள்.

ஒருவேளை நீங்கள் வியாதிப்பட்டிருந்தால், நீங்கள் குணமடையத் தக்கதாக, **சுகமாக**த் திரும்பத் தருவார்! ஒரு **வேலையாக**த் திரும்பத் தருவார்! **கர்ப்பத்தின் கனி**யாக (குழந்தை பாக்கியமாக)த் திரும்பத் தருவார்! அல்லது ஒரு **பதவி உயர்வாக**த் திரும்பத் தருவார்!

உங்களுக்குத் தேவையான ஏதோ ஒரு ஆசீர்வாதமாக, கர்த்தர் உங்களுக்குத் திரும்பத் தருவார். அமுக்கிக் குலுக்கி, சரிந்து விழும்படி, பல மடங்காக உங்களுக்குத் திரும்பத் தருவார். இதை **விசுவாசியுங்கள்.**

ஒரு மூட்டை நெல் விதைத்தால், ஒரு மூட்டை அறுவடை செய்ய மாட்டோம். வண்டி வண்டியாக அறுவடை செய்வோம்! அப்படித்தான் கர்த்தருக்குக் கொடுப்பதும்! நீங்கள் கொடுப்பதைவிட, பல மடங்காகக் கர்த்தர் உங்களுக்குத் திரும்பத் தருவார்.

ஒருமுறை விதைத்தால், ஒருமுறை அறுவடை செய்வீர்கள்! பல முறை விதைத்தால், பல முறை அறுவடை செய்வீர்கள்! தொடர்ந்து விதைத்தால்,

தொடர்ந்து அறுவடை செய்வீர்கள்! **கர்த்தருக்குக் கொடுத்துக் கொண்டேயிருந்தால், கர்த்தரும் நமக்குக் கொடுத்துக் கொண்டேயிருப்பார்!**

நீங்கள் கர்த்தருக்குக் கொடுக்கும்போது, இயேசு கிறிஸ்து சொன்ன **லூக்கா 6:38**ம் வசனத்தை விசுவாசித்துக் கொடுங்கள். கொடுத்து விட்டு, ஆசீர்வாதமான அறுவடையை **எதிர்பாருங்கள், அற்புதங்களைக் காண்பீர்கள்!**

நாம் கொடுப்பதில், இரண்டு காரியங்கள் இருக்கின்றன.

ஒன்று, **கர்த்தருக்குக் கொடுப்பது!**

அதாவது சபைகளுக்கு, ஊழியங்களுக்கு, தேவ ஊழியர்களுக்கு, மிஷனெரிகளுக்குக் கொடுப்பது.

இரண்டாவது, **ஏழைகளுக்குக் கொடுப்பது!**

அதாவது திக்கற்ற பிள்ளைகள், விதவைகள், கஷ்டப்படுகிறவர்களுக்குக் கொடுப்பது. இரண்டுமே கர்த்தருக்குப் பிரியமான காரியங்கள்தான்.

**"ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்." நீதி. 19:17.**

"ஏழைகளுக்குக் கொடுப்பதைக்கூட, கர்த்தர் ஆசீர்வாதமாகத் திரும்பக் கொடுப்பார்!" என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.

**"வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்..." (2 கொரி. 9:9)** என்று கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார்.

கர்த்தருக்கும், ஏழைகளுக்கும் **நாம் கொடுக்கக் கொடுக்க, கர்த்தரும் நம்மை ஆசீர்வதித்து செழிக்கப் பண்ணுவார்.** இந்த ஆசீர்வாதத்தை என் சொந்த வாழ்க்கையிலும், நம் '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியத்திலும் நான் அனுபவித்து வருகிறேன்.

கர்த்தர் எனக்குக் கொடுப்பதில், ஒரு பங்கைக் கர்த்தருக்கும், ஒரு பங்கை ஏழைகளுக்கும் எடுத்து வைத்து விட்டு, மீதியைத்தான் செலவு செய்வேன்.

நான் கொடுக்கக் கொடுக்க, கர்த்தர் என்னை ஆசீர்வதித்து, பணக் கஷ்டம் இல்லாமல் என்னையும், ஊழியத்தையும் நடத்தி வருகிறதைப் பார்க்கிறேன்.

நீங்களும் கர்த்தருடைய வேத வசனத்தின்படி கொடுங்கள். அவருடைய வசனத்தை
**விசுவாசியுங்கள், அற்புதங்களைக் காண்பீர்கள்!**

இன்றைக்கு நீங்கள், “கடன் பிரச்சனை! பணப் பிரச்சனை! தேவைகளுக்கு என்ன செய்வது?” என்றெல்லாம் கலங்குகிறீர்களா?

இன்றைக்கே உங்கள் விசுவாச வித்தை விதையுங்கள். **விசுவாசத்தோடு அறுவடையை எதிர்பாருங்கள். உங்கள் தேவைகள் சந்திக்கப்படும்! கடன் பிரச்சனை நீங்கும்!** செழிப்பு உண்டாகும்!

**“கொடுங்கள், உங்களுக்கும் கொடுக்கப்படும்!” என்று சொன்னவரே, உம்முடைய வார்த்தைகளை நான் விசுவாசிக்கிறேன்.**

**நான் கொடுப்பதைப் பல மடங்காக, ஆசீர்வாதமாகத் திரும்பத் தருவீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன்!**

**உம்முடைய ஊழியத்திற்கும், ஏழைகளுக்கும் கொடுக்கத் தீர்மானிக்கிறேன்!**

**முதலாவது, என்னையே உமக்குக் கொடுக்கிறேன்! என்னையும், என் காணிக்கைகளையும் அங்கீகரித்து ஆசீர்வதியும்!**

**இயேசுவின் நாமத்தில், ஆமென்! ஆமென்!**

# நிரம்பி வழியும் ஆசீர்வாதம்! பெற்றுக் கொள்வது எப்படி?

“ஊழியங்களுக்குக் கொடுக்க வேண்டும்!’ என்று ஆசையிருக்கிறது! ஆனால் வரவுக்கும், செலவுக்கும் சரியாகப் போய் விடுகிறது! என்னால் கர்த்தருடைய ஊழியங்களுக்குக் கொடுக்க முடியவில்லையே!” என்று, ஒரு சமயம் ஒரு சகோதரர் வேதனையோடு கூறினார்.

இன்றைக்கு நீங்களும் இப்படிப்பட்ட வேதனையில் இருக்கிறீர்களா? “கர்த்தருடைய ஊழியங்களுக்குக் கொடுக்க வேண்டும்! ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும்!’ என்ற விருப்பமெல்லாம் இருக்கிறது. ஆனால், கொடுக்கத்தான் முடியவில்லை! என்றைக்குத்தான் வாழ்க்கையில் செழிப்பு வருமோ?” என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா?

உங்களோடுதான் இன்றைக்குக் கர்த்தர் பேசுகிறார். நீங்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டுமல்ல, ஆசீர்வாதமாயிருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள்! அதாவது மற்றவர்களுக்கு, கர்த்தருடைய ஊழியங்களுக்கு, ஏழை–எளிய மக்களுக்கு நீங்கள் ஆசீர்வாதமாயிருக்கத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்!

**"...நீ ஆசீர்வாதமாயிருப்பாய்." (ஆதி. 12:2)** என்று வாக்குக் கொடுத்த கர்த்தர், உங்களை ஆசீர்வாதத்தின் வாய்க்காலாகப் பயன்படுத்துவார். இதுதான் உங்களைக் குறித்த, கர்த்தருடைய திட்டம்!

உங்கள் வருமானம் எவ்வளவாக இருந்தாலும் சரி, **நீங்களும் ஆசீர்வாதத்தின் வாய்க்காலாக, அனேகருக்கு ஆசீர்வாதமாயிருப்பீர்கள்** என்பதை **விசுவாசியுங்கள்.**

"மாதச் சம்பளம் வாங்குகிற நான் எப்படி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க முடியும்? வியாபாரம், தொழில் செய்து சம்பாதிக்கிறவர்கள்தான் ஊழியங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க முடியும்!" என்று தவறான எண்ணம் கொள்கிறோம்.

நீங்கள் மாதா மாதம் சம்பளம் வாங்குகிற வேலை செய்கிறவரோ, அல்லது தொழில் செய்கிறவரோ, யாராக இருந்தாலும், **நீங்களும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வர முடியும்** என்பதை **விசுவாசியுங்கள்.**

கர்த்தர் தந்திருக்கும் **வாக்குத்தத்தத்தை விசுவாசியுங்கள்.**

**"களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்." யோவேல் 2:24.**

அதாவது, "உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதம் நிரம்பி வழியும்!" என்று கர்த்தர் உங்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்.

நிரம்பி வழிந்தோடி, மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கும்படியாகக் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

எப்படி இந்த ஆசீர்வாதம் உண்டாகும்?

**"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்;" லூக்கா 6:38.**

சரிந்து விழும்படியான ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டாகும்!

தொழில் செய்து கொண்டிருக்கிற ஒரு சகோதரரை சில ஆண்டுகளுக்கு முன்பாக நான் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது, அவர் தன் அனுபவத்தை இப்படியாக என்னிடத்தில் சொன்னார்:

**அவர் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவருடைய தகப்பனார் ஒரு 500 ரூபாயை மட்டும் அவரிடத்தில் கொடுத்து, ''இதை வைத்து தொழில் செய்து பிழைத்துக் கொள்.'' என்றார்.**

**வெறும் 500 ரூபாயை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? ஒரு சிறிய இடத்தை வாடகைக்குக் கூட எடுக்க முடியாது. ஆனால் அந்த 500 ரூபாயை, அவர் இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் வைத்து, ''ஆண்டவரே, 'டாடா', 'பிர்லா'வை ஆசீர்வதிப்பதினால், உமக்கு என்ன பிரயோஜனம்? என்னை ஆசீர்வதியும். நான் உம்முடைய சபைக்கும், இந்த தேசத்திற்கும் ஆசீர்வாதமாயிருப்பேன்.**

**ஆலயமில்லாத கிராமங்களில் ஆலயங்களைக் கட்டிக் கொடுப்பேன்.'' என்று சொல்லி ஜெபித்தார். பாருங்கள், ''ஒன்றுமில்லாத நிலைமையிலேயே கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும்.'' என்று அவர் தீர்மானித்தார். கர்த்தரும் அவருடைய விசுவாசத்தைக் கனப்படுத்தி, அவர் செய்து கொண்டிருந்த சிறிய வியாபாரத்தை ஆசீர்வதித்து, ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணினார்.**

**அவர் என்னோடு பேசிக் கொண்டிருந்தபோது, ''மாதந்தோறும் 2½ லட்சம் ரூபாய் தசம பாகம் காணிக்கையாக, சபைக்குக் கொடுக்கிறேன்! அது மட்டுமல்லாமல், பல ஊழியங்களுக்கும், கிராமங்களில் ஆலயங்கள் கட்டவும் கொடுக்கிறேன். கர்த்தர் எங்களை பல ஊழியங்களுக்கு ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார்!'' என்று மிகுந்த மகிழ்ச்சியோடு**

**சொன்னார். இதுதான் ஒரு தேவப் பிள்ளையைக் குறித்ததான கர்த்தருடைய சித்தம்! நீங்கள் ஆசீர்வாதமாயிருக்க வேண்டும்.**

உங்களைக் குறித்த தேவ சித்தம் இதுதான்! நீங்களும் நம் தேசத்திற்கு ஆசீர்வாதமாயிருப்பீர்கள்!

**உங்கள் மூலமாக, உங்கள் சபை ஆசீர்வதிக்கப்படும்! உங்கள் மூலமாக, பல ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்படும்! உங்கள் மூலமாக, நம் தேசம் ஆசீர்வதிக்கப்படும்!**

# முதலாவது, கொடுக்க வேண்டும்!

கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதத்தில், பத்தில் ஒன்றை தசம பாகமாகக் கொடுப்பது ஒரு அனுபவம். அதே சமயத்தில், நம்மிடத்தில் உள்ளதை முதலாவதாகக் கொடுப்பது, அதிலும் மேன்மையான ஒரு அனுபவம்!

வட இந்தியாவில் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் ஒரு சகோதரி ஒரு சமயம், தன் அனுபவத்தை இப்படியாகக் கூறினார்கள்:

**ஒரு மலைப் பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் வசிக்கிற, கர்த்தரை ஏற்றுக் கொண்ட ஒரு ஆதிவாசிக் குடும்பத்தைச் சந்தித்து, அவர்களுக்காக ஜெபித்து விட்டு வர இரண்டு சகோதரிகள் போனார்கள். அந்த தேவ ஊழியக்காரிகளைப் பார்த்தபோது, அந்த ஏழை ஆதிவாசிக் குடும்பத்தினருக்கு மிகுந்த சந்தோஷம். மிகுந்த அன்போடு அவர்களை உபசரித்தார்கள்.**

**அவர்களுக்காக ஜெபித்து முடித்து விட்டு, அந்த சகோதரிகள் புறப்பட்டபோது, தங்கள் வீட்டிற்கு 'ஜெபிக்க வந்த தேவ ஊழியர்களை வெறுங் கையோடு அனுப்பக் கூடாது. ஏதாவது காணிக்கை கொடுக்க வேண்டும்.' என்று எண்ணி, அந்தக் குடும்பத்தார்**

கவலைப்பட்டார்கள். கொடுப்பதற்கு அவர்களிடத்தில் பணம் இல்லை. அந்த வீட்டிலிருந்த சகோதரி, கடைசியாக தங்கள் வீட்டிலிருந்த சுமார் ஒரு கிலோ கோதுமையை ஒரு பையில் போட்டு, அந்த ஊழியர்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்கள்.

அந்த ஊழியக்கார சகோதரிகளுக்கோ காரியம் விளங்கி விட்டது! வீட்டிற்குள் சென்று பார்த்தால், அடுத்த வேளை சமைப்பதற்கு அந்த வீட்டில் எதுவுமில்லை.

உடனே அவர்கள், ''இந்தக் கோதுமையை நாங்கள் எடுத்துச் செல்ல மாட்டோம். இதுதான் உங்களுடைய கடைசி ஆகாரத்திற்கான கோதுமை என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். இதையே எங்களுக்கு நீங்கள் கொடுத்து விட்டால், அடுத்து உங்கள் ஆகாரத்திற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த வீட்டார், ''எங்கள் வீட்டிற்கு வந்த தேவ ஊழியர்களை நாங்கள் வெறுமனே அனுப்பக் கூடாது.

எங்களிடத்தில் இருப்பதை உங்களுக்குத் தந்து விட்டோம். எங்கள் தேவைகளைக் கர்த்தர் பார்த்துக் கொள்வார்!'' என்று சொல்லி, கட்டாயப்படுத்தி அதை அவர்களிடத்தில் கொடுத்து சந்தோஷமாக அனுப்பி விட்டார்கள்.

அதை வாங்கிக் கொண்ட அந்த சகோதரிகள், அதை மறுக்க முடியாமல், கனத்த இருதயத்தோடு தங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தார்கள்.

ஒரு வாரம் கழித்து அந்த சகோதரிகள், ''அந்தக் குடும்பத்தார் எப்படியிருக்கிறார்கள்?' என்று, போய் பார்த்து விட்டு வரலாம்!'' என்று, மீண்டும் அந்த கிராமத்திற்குப் போனார்கள்.

வழக்கம்போல அந்தக் குடும்பத்தார் மகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்றார்கள்.

**அந்த சகோதரிகள் அந்தக் குடும்பத்தாரைப் பார்த்து, ''கடைசியாக உங்களுக்கிருந்த அந்தக் கோதுமையையும் எங்களுக்குக் கொடுத்து விட்டீர்களே! 'உங்கள் தேவைக்கு என்ன செய்வீர்கள்?' என்று ஒரு வாரமாக நாங்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தோம். அதனால்தான் உங்களை விசாரித்து விட்டுப் போக வந்தோம்.'' என்றார்கள்.**

**''கர்த்தர் எப்படி எங்களைக் கைவிடுவார்? நீங்கள் வந்து விட்டுப் போன அடுத்த நாள், சில அரசாங்க அதிகாரிகள் எங்கள் கிராமத்திற்கு வந்து, அரசாங்கம் ஆதிவாசிக் குடும்பங்களுக்கென்று ஒதுக்கியிருந்த உதவித் தொகையைக் கொடுத்தார்கள்.**

**எங்கள் குடும்பத்திற்கு, அவர்கள் கொடுத்த பணத்தில் கோதுமையும், புது உடைகளும்கூட நாங்கள் வாங்கியிருக்கிறோம் பாருங்கள்!'' என்று அவர்களிடத்தில் அவைகளைக் காண்பித்து மகிழ்ந்தார்கள்.**

பாருங்கள், அந்தக் குடும்பத்தார் கடைசியாகத் தங்களிடத்திலிருந்த தானியத்தையும் கர்த்தருக்கென்று கொடுத்தார்கள். கர்த்தர் அவர்களுடைய தியாகத்தையும், ஊழியர்கள் மீது அவர்கள் வைத்திருந்த அன்பையும் பார்த்தார், நிரம்பி வழியும்படி அவர்களை ஆசீர்வதித்து விட்டார்!

ஆலயத்தில் காணிக்கைப் பெட்டியில் காணிக்கை போட்ட ஏழை விதவையைக் குறித்து, இயேசு கிறிஸ்து என்ன சாட்சி கொடுத்தார்? **"...இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்." மாற்கு 12:44.**

**அந்த ஏழை விதவையைக் கர்த்தர் போஷிக்காமல் சும்மா விட்டிருப்பாரா? அந்த ஆதிவாசிக் குடும்பத்தைப் போஷித்ததுபோல, அந்த ஏழை விதவையின் தேவைகளையும் கட்டாயம் கர்த்தர் சந்தித்திருப்பார்!**

# தியாகத்தோடு கொடுக்க வேண்டும்!

அந்த ஏழை விதவை தியாகத்தோடு கொடுத்தாள்! தனக்கிருந்த எல்லாவற்றையும் கொடுத்தாள்! தான் பாதிக்கப்படும்படி கொடுத்தாள்!

ஐசுவரியவான்கள், தங்கள் பரிபூரணத்திலிருந்து கொடுத்தார்கள். அதனால் அவர்கள் பாதிக்கப்படப் போவதில்லை. காரணம், இன்னும் அவர்களுக்கு ஏராளம் இருக்கிறது. தாங்கள் பாதிக்கப்படாத விதத்தில் அவர்கள் கொடுத்தார்கள்.

ஆனால் அந்த விதவைக்கு இருந்ததோ, அந்த இரண்டு காசுதான். அதுதான் தன்னிடத்தில் இருந்த கடைசிக் காசு. “அடுத்த வேளை தேவைக்கு என்ன செய்வது?” என்ற சூழ்நிலையில், தியாகத்தோடு கொடுத்தாள்.

“இந்தக் காசையும் கொடுத்து விட்டால், பாதிக்கப்படுவோம்!” என்று தெரிந்திருந்தும் கொடுத்தாள். ஆகவேதான், இயேசு கிறிஸ்து அந்த ஏழை விதவை கொடுத்ததை சாட்சியாகச் சொன்னார்.

**நாம் எப்படிக் கொடுக்கிறோம்?**

**ஒரு தாயார், தான் செய்து கொண்டிருந்த வேலையிலிருந்து ஓய்வு பெற்றபோது, அவர்களுக்கு வந்த ‘பி.எப்.’ (Provident Fund) பணத்தைக் கொண்டு வந்து, ‘‘இதை வைத்து வட இந்தியாவில் ஏழைகளுக்கு ஆலயம் கட்டுங்கள்.’’ என்று சொல்லி என்னிடத்தில் கொடுத்தார்கள். ஆனால், அதைப் பெற்றுக் கொள்ள எனக்கு விருப்பமேயில்லை.**

**அந்த ஏழைத் தாயாருக்கு அந்தப் பணம்தான் வாழ்வாதாரம். அதை வைத்துத்தான் தன்னுடைய எஞ்சிய காலத்தை அவர்கள் கழிக்க வேண்டும். ஆனால், தன் எதிர்காலத்திற்கென்று இருந்த பணத்தையெல்லாம்**

**கர்த்தருக்கென்று காணிக்கையாகக் கொடுத்து விட்டார்கள்.**

**“இதை உங்களுக்குக் கொடுக்கவில்லை, ஆலயம் கட்டுவதற்காகக் கர்த்தருக்குக் கொடுக்கிறேன்...” என்று அவர்கள் சொன்னபடியினால், என்னால் அதை மறுக்க முடியவில்லை.**

**தியாகத்தோடு தனக்கிருந்த எல்லாவற்றையும் கொடுத்து விட்டார்கள். தன்னுடைய ‘தேவைகளைக் கர்த்தர் பார்த்துக் கொள்வார்!’ என்கிற ஒரு விசுவாசத்தோடு கொடுத்தார்கள்.**

**நாம் எப்படிக் கொடுக்கிறோம்?**

**ஒருமுறை, நாகர்கோவில் பட்டணத்திற்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்தேன். ஒரு சகோதரி, ஒரு தங்க வளையலை காணிக்கையாக என்னிடத்தில் கொடுத்து, “இதை விற்று, வட இந்தியாவில் ஆலயம் கட்டப் பயன்படுத்துங்கள்.” என்று சென்னார்கள்.**

**நான் அவர்களிடத்தில் விசாரித்தபோது, “என் கணவர் மரித்து விட்டார். என் நகைகளை விற்றுத்தான் என் பிள்ளைகளைப் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறேன்.**

**கிராமங்களில் ஆலயம் கட்டுவதை அறிந்தபோது, ‘நானும் கர்த்தருக்காக ஏதாவது செய்ய வேண்டும்!’ என்று விரும்பினேன். கொடுப்பதற்கு என்னிடத்தில் பணமில்லை. தயவு செய்து இதை வாங்கிக் கொள்ளுங்கள். என்னிடத்தில் உள்ளதைத் தருகிறேன். இதை விற்று ஆலயம் கட்டப் பயன்படுத்துங்கள்.” என்றார்கள்.**

அந்த விதவைச் சகோதரியின் தியாகமான காணிக்கையைப் பார்த்து, இயேசு கிறிஸ்து என்ன சொல்லியிருப்பார்? அன்று தேவாலயத்தில் அந்த ஏழை விதவையின் காணிக்கையைக் குறித்து சாட்சி கொடுத்த இயேசு கிறிஸ்து, இந்த விதவையின் காணிக்கையைக் குறித்தும் சாட்சி சொல்லியிருப்பாரல்லவா?

நீங்கள் கொடுப்பதைக் குறித்து, இயேசு கிறிஸ்து சாட்சி சொல்ல முடியுமா?

பஞ்சக் காலத்தில் **எலியா** தீர்க்கதரிசி, ‘சாறிபாத்’ விதவையினிடத்தில் அனுப்பப்பட்டார். எலியா அந்த விதவையினிடத்தில் அப்பமும், தண்ணீரும் கேட்டார்.

பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும்தான் இருந்தது. அதுதான் அவளுக்குக் கடைசி உணவு. அதற்கு மேல் அவளுக்குச் சாப்பாட்டிற்கு வேறு வழியே இல்லை.



அந்தச் சூழ்நிலையில், தேவ மனிதனாகிய எலியா சொன்னபடி அப்பம் சுட்டு, முதலாவது அந்தக் கர்த்தருடைய ஊழியக்காரனுக்குக் கொடுத்தாள். தன் கடைசி ஆகாரத்தையும் தியாகத்தோடு கொடுத்தாள்!

அவள் அப்படிச் செய்ததினால், கர்த்தர் அவளுக்குச் செய்த காரியம் என்ன தெரியுமா?

பஞ்சக் காலம் முடியும்வரை பானையிலே மாவு செலவழிந்து போகவும் இல்லை! கலசத்திலே எண்ணெய் குறைந்து போகவுமில்லை!

எடுக்க எடுக்க, வந்து கொண்டேயிருந்தது! நிரம்பி வழிகிற ஆசீர்வாதம் உண்டாயிற்று! அவளும், அவள் வீட்டாரும் அதனால் பஞ்சக் காலத்தில் பாதுகாக்கப்பட்டார்கள். **(1 இராஜா. 17:9-16).**

அந்த விதவை, தன்னிடத்திலிருந்த அந்தக் கடைசி ஆகாரத்தையும் தியாகத்தோடு, அந்த தேவ மனிதனுக்குக் கொடுத்தாள்.

கர்த்தர் அற்புதம் செய்து, அந்தக் குடும்பத்தையே போஷித்துக் காப்பாற்றினார்.

தியாகத்தோடு கொடுக்கும்போது, கர்த்தர் நிரம்பி வழியும்படி ஆசீர்வதிப்பார்!

மக்கெதோனியா நாட்டு விசுவாசிகளைக் குறித்து, அப்போஸ்தலனாகிய பரிசுத்த **பவுல்**, சாட்சியாகச் சொன்ன காரியத்தைப் பாருங்கள்:

**"...மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.**

**அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்." 2 கொரி. 8:1-3.**

பஞ்சக் காலத்தில் பரிசுத்தவான்களுக்கு உதவும்படியாக, பவுல் அப்போஸ்தலன் பணம் சேகரித்து வந்தார். அப்பொழுது மக்கெதோனியா நாட்டு சபையின்

தேவப் பிள்ளைகள் தரித்திரம் உடையவர்களாக இருந்தும், உதாரத்துவமாகக் கொடுத்தார்கள்! சந்தோஷத்தோடு கொடுத்தார்கள்! தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள்! அதாவது, தியாகத்தோடு கொடுத்தார்கள்! அவர்கள் தியாகத்தோடு கொடுத்தது, ஒரு சாட்சியாக பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது பாருங்கள்!

முறுமுறுத்துக் கொண்டு அல்ல! 'ஒரு பெரிய தேவ ஊழியக்காரராகிய பவுல் கேட்கிறாரே!' என்று அல்ல! தங்கள் கஷ்டத்திற்கு மத்தியிலும் மகிழ்ச்சியோடு கர்த்தருக்கென்று கொடுத்தார்கள். **நாம் எப்படிக் கொடுக்கிறோம்?**

# முன்பதாக, நம்மைக் கொடுக்க வேண்டும்!

மக்கெதோனியா நாட்டு சபையின் தேவப் பிள்ளைகள், **"...தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக் கொடுத்தார்கள்." 2 கொரி. 8:5.** முதலாவது நம்மைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்காமல், நாம் எவ்வளவுதான் காணிக்கை கொடுத்தாலும், கர்த்தர் அந்தக் காணிக்கையை அங்கீகரிக்கவே மாட்டார். முதலாவது நம்மை, நம் வாழ்க்கையை கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும். உங்களைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறீர்களா?



ஆதாமுடைய இரண்டு குமாரர் **காயீன், ஆபேல்.** இருவருமே கர்த்தருக்குக் காணிக்கை கொண்டு வந்தார்கள்.

**"...ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை." ஆதி. 4:4,5.**

ஒருவேளை இன்றைக்கு, உங்கள் காணிக்கையை சபைகள் அங்கீகரிக்கலாம்! ஊழியர்கள் அங்கீகரிக்கலாம்! கர்த்தர் அங்கீகரிக்கிறாரா? கர்த்தர் உங்கள் காணிக்கையை அங்கீகரித்தால்தான், நிரம்பி வழியும் ஆசீர்வாதமாக அதை உங்களுக்குத் திரும்பத் தருவார்.

உங்கள் காணிக்கையைக் கர்த்தர் அங்கீகரிக்க வேண்டுமானால், முதலாவதாக, காணிக்கை கொடுக்கிற உங்களை அவர் அங்கீகரிக்க வேண்டும். அநியாய சம்பாத்தியம், மற்றவர்களை ஏமாற்றி சம்பாத்தியம், திருட்டுச் சம்பாத்தியம், லஞ்சம் வாங்கி சம்பாத்தியம் செய்கிறவர்களைக் கர்த்தர் ஒருபோதும் அங்கீகரிப்பதே இல்லை. அவர்களுடைய காணிக்கையைக் கர்த்தர் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதுமில்லை.

நீங்கள் கர்த்தருக்குக் கொடுக்கும் காணிக்கை உண்மையாக சம்பாதித்ததாக இருக்க வேண்டும். நீங்கள் கொடுக்கும் காணிக்கை பரிசுத்தமுள்ளதாக இருக்க வேண்டும். அப்போதுதான் கர்த்தர் உங்கள் காணிக்கையை ஏற்றுக் கொள்வார்.
கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்வதைக் கவனியுங்கள்:

**"...நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து." மத்தேயு 5:23,24.**

சகோதரனோடு சண்டை, பகை, கசப்பை வைத்துக் கொண்டு, நீங்கள் கொடுக்கிற

காணிக்கையைக் கர்த்தர் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. “முன்பு சகோதரனோடு ஒப்புரவாக வேண்டும்.” என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார். மனிதர்களோடு உள்ள உங்களுடைய உறவை சரிப்படுத்திக் கொள்ளுங்கள்.

தேவ அன்பினால் நிறைந்திருங்கள். அப்பொழுது நீங்கள் கொடுக்கும் காணிக்கையைக் கர்த்தர் அங்கீகரித்து, ஆசீர்வதிப்பார்.

கர்த்தருடைய பிள்ளைகள் அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதிலும் உண்மையாக இருக்க வேண்டும். “இராயனுக்கு (அரசாங்கத்துக்கு) வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ? நாம் கொடுக்கலாமோ? கொடுக்கக் கூடாதோ?” என்று இயேசு கிறிஸ்துவிடம் கேட்கப்பட்டது.

**“...அதற்கு இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்.” (மாற்கு 12:14-17).**

அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தி, கர்த்தருடையதைக் கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும், அப்பொழுதுதான் கர்த்தர் நம்முடைய காணிக்கையை அங்கீகரித்து, நிரம்பி வழியும்படி ஆசீர்வதிப்பார்.

**“...யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்.” ரோமர் 13:7.**

“அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரியை நாம் செலுத்த வேண்டும்.” என்று வேத வசனம் சொல்கிறது.

வரி செலுத்தா விட்டால், அது கர்த்தருக்கு விரோதமான பாவம்!

"அரசாங்கம் வரிப் பணத்தில் ஊழல் செய்கிறது! வரி செலுத்தி என்ன பிரயோஜனம்?

வரி செலுத்த வேண்டிய பணத்தை நான் ஊழியத்திற்குக் கொடுக்கலாமல்லவா?" என்று கேட்பவர்கள் உண்டு.

"அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும்!" என்பது, கர்த்தருடைய கட்டளை! அதற்கு நாம் கீழ்படிந்தே ஆக வேண்டும்.

அரசாங்கம் அதைத் தவறாகப் பயன்படுத்தினால், கர்த்தர் அவர்களிடத்தில் நியாயம் விசாரிப்பார்! நாம் நம்முடைய கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும்.

நாம் வரி செலுத்துவது என்பது, நம் தேசத்திற்கு நாம் செலுத்தும் நம்முடைய பங்கு. நம் தேசம் ஆசீர்வாதமாக இருக்க, நாம் நம் தேசத்திற்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும்.

"இயேசு கிறிஸ்துவும் வரி செலுத்தினார்." என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

**"...வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து: உங்கள் போதகர்** (இயேசு கிறிஸ்து) **வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று கேட்டார்கள்; செலுத்துகிறார் என்றான்." மத்தேயு 17:24.** இயேசு கிறிஸ்துவைப்போல, நாமும் நம் தேசத்திற்கு, நம் பங்களிப்பை சரியாகச் செய்ய வேண்டும்.

வேத வசனத்தின்படி நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, வேத வசனத்தின்படி கர்த்தருக்குக் கொடுத்தால், வேத வசனத்தின்படி நிரம்பி வழியும்படி கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

நீங்கள் கொடுக்கக் கொடுக்க, கர்த்தரும் உங்களுக்குக் கொடுத்துக் கொண்டேயிருப்பார். விதைக்க, விதைக்க அறுவடையைக் காண்பதுபோல, கொடுக்கக் கொடுக்க, ஆசீர்வாதத்தின் அறுவடையைக் காண்பீர்கள்!

**"...நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.**

**வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்.**

**விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்." 2 கொரி. 9:8-10.**



பரலோகப் பிதாவே, என்னோடு நீர் பேசியதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! என்னை நிரம்பி வழியும்படி ஆசீர்வதிக்க நீர் விரும்புகிறதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!ஆசீர்வாதத்திற்கான வழியை எனக்குக் கற்றுக் கொடுத்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

நானும் செழிப்பான வாழ்க்கை வாழ விரும்புகிறேன்! அனேக ஊழியங்களுக்கு, சபைக்கு, தேசத்திற்கு ஆசீர்வாதமாக இருக்க விரும்புகிறேன்!

தடையாக இருக்கிற என் பாவங்களை எனக்கு மன்னியும்!நான் யாவரோடும் சமாதானமாக இருக்க எனக்கு உதவி செய்யும்!

அரசாங்கத்திற்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய எனக்குக் கிருபை தாரும்! ஒழுங்காக வரி செலுத்த என்னை அர்ப்பணிக்கிறேன்! விசுவாசத்தோடு, தியாகத்தோடு முதலாவது நான் கொடுக்க அர்ப்பணிக்கிறேன்! 'அமுக்கிக் குலுக்கி, சரிந்து விழும்படியான ஆசீர்வாதத்தைத் தருவீர்!' என்று,

**லூக்கா 6:38ம் வசனத்தை விசுவாசித்துக் கொடுக்கிறேன்!**

**என் பணப் பிரச்சனையெல்லாம் மாறி, செழிப்பான நிரம்பி வழியும் ஆசீர்வாதமான வாழ்க்கையை எனக்குத் தந்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! விசுவாசத்தோடு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறேன்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே! ஆமென்! ஆமென்!**


**வியாபாரம் மற்றும் தொழில் செய்கிறவர்களுக்காக,**

**நாலுமாவடி-தேவனுடைய கூடாரத்தில்**

# ஆசீர்வாத உபவாச ஜெபம்!

ஒவ்வொரு வருடமும் **மார்ச்** மாதம் **2வது சனிக்கிழமை,**
காலை **9:00** – மாலை **3:00** மணிவரை நடைபெறும்.
வருடந்தோறும் சுமார் 20,000க்கும் அதிகமான வியாபாரிகள் மற்றும் தொழில் செய்கிற மக்கள் கலந்து கொள்கிற, இந்த உபவாச ஜெபத்தில் தேவ ஆலோசனைகளோடுகூட, பல தொழிலதிபர்களின் அனுபவ சாட்சிகளும் இடம் பெறும்.

**மேலும் விபரங்களுக்கு: 04639 - 220 022, ஃபேக்ஸ்: 04639-22 00 33.**

**சென்னையில்** ஒவ்வொரு மாதமும் 4வது ஞாயிறு

**வியாபாரிகள் ஆசீர்வாதக் கூடுகை!**

இடம்: **VGP VICTORY HOUSE,** 2nd FLOOR, D.NO:17, OLD NO:39, ANNA SALAI, MOUNT ROAD, CHENNAI-2.
நேரம்: **மாலை 5:30 மணிக்கு**

**மேலும் விபரங்களுக்கு: போன்: 044-284 12 300, 8939 33 33 99.**

**வியாபாரம் மற்றும் தொழில் செய்கிறவர்களுக்காக சிறப்புப் பிரார்த்தனைகள் ஏறெடுக்கப்படும். வாருங்கள்... பங்கு பெறுங்கள்! தேவாசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.**

**இயேசு என் தொழில் பங்காளர்!**

**(JESUS, MY BUSINESS PARTNER)**

# வியாபாரிகள் ஆசீர்வாத ஜெபத் திட்டம்!

## (BUSINESS BLESSING PRAYER PLAN)

வியாபாரத்தில் நஷ்டம்...காரணமில்லாத வீண் செலவுகள்... தொழிலில் பின்னடைவு... தடைகள்... வேலையாட்களால் பிரச்சனைகள்...கடன் பிரச்சனை...' என்று, இப்படியாக, தாங்கள் செய்து வருகிற தொழிலில் பலவிதமான நெருக்கங்களைச் சந்தித்து வருகிற தேவப் பிள்ளைகளுக்காக ஜெபிக்கவும்,

தங்கள் தொழிலில் ஏற்படுகிற நெருக்கத்தினால் உண்டாகும் மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெறவும், மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் தொழில் செய்வதற்குக் கிருபை கொடுக்கவும், தான் வாக்குக் கொடுத்தபடியே, உங்கள் வியாபாரத்தை, தொழிலை ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணவும், **உங்களுக்காக ஜெபிப்பதற்காகவே இந்த ஜெபத் திட்டத்தைக் கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிறார்.**

இந்த ஜெபத் திட்டத்தில் இணைந்து கொள்கிற **உங்களுக்காக, தினமும் ஒருமணி நேரம்,** நம் **'இயேசு விடுவிக்கிறார்' ஜெபக் குழுவில் ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்! நானும் உங்களுக்காக, உங்கள் தொழிலுக்காக ஜெபிப்பேன்!** கர்த்தர், தான் வாக்குக் கொடுத்தபடியே, உங்கள் தொழிலை ஆசீர்வதித்து, பெருகப் பண்ணுவார்!

இந்த ஆசீர்வாத ஜெபத் திட்டத்தில் சேர்ந்து கொள்ள, **எந்தக் கட்டணமும் கிடையாது**. ஆனால், இயேசுவை உங்கள் தொழிலின் பங்காளராக நீங்கள் ஏற்றுக் கொண்டு, அவருக்குப் பிரியமான காரியங்களைச் செய்யத் தீர்மானிக்க வேண்டும்!

## தினமும் குறைந்தது,
## 10 நிமிடங்கள் வேதாகமத்தை தியானித்து,
## 10  நிமிடங்கள் தவறாமல் ஜெபித்து,
### தொழிலுக்குச் செல்ல அர்ப்பணிக்க வேண்டும்!

தினமும் நீங்கள் வாசிக்க வேண்டிய வேதாகமப் பகுதிகளும், தினமும் நீங்கள் ஜெபிக்கும்படியான, மாதிரி ஜெபமும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்!

மாதத்தில் ஒரு நாளாவது, ஒரு வேளையாவது குடும்பமாக **உபவாசித்து, உங்கள் தொழிலுக்காக ஜெபிக்க வேண்டும்!**

இத்திட்டத்தில் சேர்கிறவர்களுக்கு, '**நீங்கள் இயேசுவின் பங்காளன்!**' என்பதை நினைவுபடுத்தும்படியான வாக்குத்தத்தத்தோடு கூடிய அழகிய **சான்றிதழ்** ஒன்று உங்களுக்குக் **கொடுக்கப்படும்!** உங்களுக்கென்று, 'வியாபாரிகள் ஆசீர்வாத **ஜெபப் பங்காளர் எண்**' **(BUSINESS BLESSING PRAYER PARTNER NO:**) என்று, ஒரு எண் கொடுக்கப்படும்.

நீங்கள் எங்களோடு தொடர்பு கொள்ளும்போதெல்லாம், அந்த எண்ணை **(BBPP NO:)** குறிப்பிட்டு, தெரியப்படுத்தினால், உங்களுக்காக உடனே ஜெபித்து, பதில் மற்றும் ஆலோசனைகளை எழுத எங்களுக்கு உதவியாயிருக்கும்!

நாங்கள் ஒரு அழகிய சான்றிதழும், வேத வாசிப்புக்கான ஒரு சிறிய புத்தகமும், மாதிரி ஜெபம் அடங்கிய ஜெப அட்டையும் உங்களுக்கு அனுப்பி வைப்போம்.

இந்த ஆசீர்வாத ஜெபத் திட்டத்தில் நீங்கள் சேர விரும்பினால், கீழ்கண்ட முகவரிக்கு அல்லது, அருகிலுள்ள '**இயேசு விடுவிக்கிறார்**' கிளை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். – உங்கள் சகோதரன்.

முகவரி:

**இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி-628 211,**
**தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.**
Cell: 984 27 35 305. Toll Free: 1800 425 5315

தேசத்திற்காக ஜெபிக்க... நாலுமாவடி-**தேவனுடைய கூடாரத்தில்**

## ஜாமக்காரன் ஜெபம்!

**நாள்தோறும்** காலை 10:00 - மதியம் 3:00.
இரவு 10:00 - அதிகாலை 3:00 (ஆண்கள் மட்டும்)

## அற்புத விடுதலை பிரார்த்தனை!

**வியாழக்கிழமைதோறும்**
முற்பகல் 11:00 - மாலை 3:00.

## முழு இரவு ஜெபம்!

**2வது சனிக்கிழமைதோறும்**
இரவு 9:00 - அதிகாலை 5:00.

## திறப்பின் வாசல் ஜெபம்!

**கடைசி சனிக்கிழமைதோறும்**
காலை 9:00 - மாலை 3:00.

**தொடர்புக்கு: 04639-22 00 22.**

திருநெல்வேலி மாவட்டம்-கடையத்திற்கு
அருகிலுள்ள கீழ மாதாபுரம் -
**ஜெப மலை**யில்

## திறப்பின் வாசல் ஜெபம்!

கடைசி சனிக்கிழமைக்கு
முந்தின **வியாழக்கிழமை**
காலை 10:00 - மாலை 3:00.

**தொடர்புக்கு: 04634-240 245.**

**வியாதியஸ்தர்களுக்காக சிறப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்!**



315000047

Jesus Redeems MINISTRIES

Nalumavadi-628211
Thoothukudi Dt., India.
Tel: +91-4639-22 00 22.
Website: www.jesusredeems.com